
# கருவூர் அகழாய்வு








பதிப்பாசிரியர்

முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்




ஆசிரியர்கள்

கி. ஸ்ரீதரன்

து. துளசிராமன்

இரா. செல்வராஜ்

முனைவர் சீ.வசந்தி



தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை சென்னை-600 008

2011, திருவள்ளுவர் ஆண்டு - 2042

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டினை ஒட்டி தமிழக அரசின் சிறப்பு நிதி உதவியின் மூலம் வெளியிடப்படுகிறது.

**தமிழக அகழாய்வுகள்**

---

# கருவூர் அகழாய்வு


பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்கள்

கி. ஸ்ரீதரன்

து. துளசிராமன்

இரா. செல்வராஜ்

முனைவர் சீ. வசந்தி



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை-600 008

2011, திருவள்ளுவர் ஆண்டு - 2042

# அச்சிட்டோர் விவரம்


| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 2011 |
| வெளியீடு எண் | : | 231 |
| நூலின் பெயர் | : | கருவூர் அகழாய்வு |
| பதிப்புரிமை | : | தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப.,<br>முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் |
| ஆசிரியர்கள் | : | கி. ஸ்ரீதரன்<br>து. துளசிராமன்<br>இரா. செல்வராஜ்<br>முனைவர் சீ. வசந்தி |
| மொழி | : | தமிழ் |
| எழுத்தின் அளவு | : | 12 புள்ளிகள் |
| தாள் அளவு | : | 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ |
| பிரதிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | 48 |
| விலை | : | ரூ. 27.00 |
| அச்சிட்டோர் | : | தரமணி மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கம்,<br>46, பீட்டர்ஸ் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-600 014. |


# உள்ளடக்கம்


பதிப்புரை

| | | |
|---|---|---|
| 1. கருவூர் தொன்மைச் சிறப்பு | ... | 1 |
| 2. கருவூர் - வரலாறு | ... | 4 |
| 3. கருவூர் - வஞ்சி | ... | 9 |
| 4. கல்வெட்டுகளில் - செப்பேடுகளில் கருவூர் | ... | 12 |
| 5. காலப் பகுப்பும் பண்பாடும் | ... | 16 |
| 6. அகழாய்வுக் குழிகள் | ... | 20 |
| 7. மட்பாண்டங்கள் எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடுகள் | ... | 25 |
| 8. தொல்பொருட்கள் காசுகள், முத்திரைகள், மோதிரங்கள், மணிகள் | ... | 29 |
| 9. முடிவுரை | ... | 30 |
| (i) துணைநின்ற நூல்கள் | ... | 31 |
| (ii) வரைபடங்கள் | ... | 33 |
| (iii) நிழற்படங்கள் | ... | 38 |


## அட்டை விளக்கம்

1. சேர மன்னன் கொல்லிப்புறை காசு
2. மூதா அ மண்ணன் யாற்றூர் செங் காயபன் உறைய
   கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
   பெருங்கடுங்கோன் மகன் இளங்
   கடுங்கோ ளங்கோ ஆகி அறுத்தகல் - புகளூர்க் கல்வெட்டு
3. கருவூர் பொன் வாணிகன்
   நத்தி அதிட்டாணம்
4. அகழாய்வுக் குழியில் வெளிப்படுத்தப்பட்ட சங்ககாலக் கட்டடம்
5. அகழாய்வுக் குழியில் கிடைத்த பண்டையத் தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடு
   (ர)யதிய அயமரையஅய்பா


ஈ ரோ டு
நாமக்கல்
திருச்சிராப்பள்ளி
கரூர்
திருஷ்ணராயபுரம்
குளித்தலை
அரவக்குறிச்சி
ஈ ரோ டு
இ ந் தி யா
தி ண் டு க் க ல்
திருச்சிராப்பள்ளி
மணப்பாறை
புதுக்கோட்டை
பரமத்தி
பவித்ரம்
வெங்கடாபுரம்
பள்ளப்பாளையம்
மணல்மேடு
நத்தமேடு
கட்டளைப்பட்டி
மானாவாடி
பாகநத்தம்
கோவில்பாளையம்
வெள்ளியணை
தோகைமலை
கரூர் மாவட்டம்

கரூர் மாவட்டம்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

# பதிப்புரை

தமிழ்நாட்டில் தொல்லியல் துறை 34 வரலாற்று சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொண்டுள்ளது. இவற்றில் 27 இடங்கள் குறித்த நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் பல நூல்கள் அறிஞர்கள் மட்டுமின்றி பாமரரும் அறியும் வகையில் தமிழில் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வரிசையில் கருவூர் அகழாய்வு அறிக்கை நூலாக வெளிவருவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நூலில் கருவூரின் தொன்மைச் சிறப்பும் வரலாறும் இலக்கியங்களின் எடுத்துக்காட்டுகளோடு இயம்பப்படுகிறது. தமிழகத்திலேயே கருவூர் பகுதியில்தான் அதிக அளவு உரோமானியர் காசுகள் கிடைத்துள்ளன. இதன் மூலம் மிகச்சிறந்த வணிக நகரமாக கருவூர் திகழ்ந்துள்ளது. கருவூரில் அமராவதி ஆற்றங்கரையில் சங்க காலத்தைச் சேர்ந்த பண்டைத் தமிழ் எழுத்துக்களில் பெயர்கள் பொறிக்கப்பட்ட தங்கம், வெள்ளி மோதிரங்கள் கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் கருவூரின் வரலாற்றுச் சிறப்பினை அறியமுடிகிறது. கருவூரில் நடைபெற்ற அகழாய்வின் மூலம் கிடைக்கப்பெற்ற காசுகள், முத்திரைகள், மோதிரங்கள், எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், குறியீடுகள், மணிகள் நிழற்படங்களாகவும் வரைபடங்களாகவும் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டினைச் சிறப்பிக்கும் வகையில் 19 நூல்களை வெளியிட திட்டமிட்டது. அவற்றில் கருவூர், தேரிருவேலி, கொடுமணல் அகழாய்வு அறிக்கைகள் வெளியிடப்படவுள்ளன. அவ்வகையில் கருவூர் அகழாய்வு அறிக்கையினை வெளியிட நிதி நல்கிய தமிழக அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கருவூரில் இத்துறை முன்னாள் இயக்குநர்கள் முனைவர் இரா. நாகசாமி, திரு நடன. காசிநாதன் அவர்களின் வழிகாட்டுதலின்படி அகழாய்வினை மேற்கொண்டனர். அகழாய்வில் பங்கு கொண்ட அனைவரையும் பாராட்டுகிறேன். அகழாய்வு அறிக்கை நூல் வடிவம் பெற எழுத்துப் பணியினை மேற்கொண்ட திரு. கி. ஸ்ரீதரன், திரு. து. துளசிராமன், திரு. இரா. செல்வராஜ், முனைவர் திருமதி. சீ. வசந்தி ஆகியோரைப் பாராட்டுகிறேன். மற்றும் இந்நூலினை நல்ல முறையில் டி.டி.பி. செய்து அச்சுப்பிழைதிருத்தம் செய்த அச்சுப்பிரிவினருக்கும் எனது பாராட்டுகள்.

தமிழக வரலாற்று ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இவ்வாய்வு அறிக்கை பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

18-11-2011

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

# கருவூர் தொன்மைச் சிறப்பு

## கருவூர்

தமிழ்நாட்டில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஊர்களில் கருவூரும் ஒன்று. கைத்தறி நெசவுத் தொழிலுக்கு சிறப்புப் பெயர் பெற்ற இடம். இன்று தனி மாவட்டமாகத் திகழ்கிறது. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே சுமார் 77 கி.மீ. தொலைவில் (Latitude 10°.58'N Longitude 78°05'E) சங்க இலக்கியங்கள் போற்றும் அமராவதி (ஆன் பொருநை) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இவ்வூர் தமிழக சமூக - பொருளாதார வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தனித்தன்மை வாய்ந்த வரலாற்றினை தன்னகத்தே கொண்டு விளங்குவதைக் காணலாம்.

இலக்கியங்கள், கல்வெட்டுகள், இங்கு கிடைத்த காசுகள் ஆகியவை கருவூரின் தொன்மை வரலாற்றுக்கு அடிப்படைச் சான்றாக விளங்குகின்றன. இவ்வூரின் தொன்மைச் சிறப்பினை அறிந்து கொள்ள இங்கு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான கருவூர் நகரில் அகழாய்வு மேற்கொள்ள இடம் தேர்ந்தெடுப்பது மிகவும் கடினமாக இருந்தது. எனவே இங்குள்ள பள்ளிகளில் காலி இடமாக உள்ள விளையாட்டு மைதானங்களில் மேற்பரப்பு ஆய்வு மேற்கொண்டபின் அகழாய்வு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கருவூரில் 1973-74, 1977, 1979 மற்றும் 1996 ஆண்டுகளில் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை அகழாய்வினை மேற் கொண்டது. இங்கு ஒன்பது இடங்களில் அகழாய்வுக் குழிகள் இடப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

## கருவூர் தொன்மைச் சிறப்பு

கற்காலத்தைச் (PALAEOLITHIC) சேர்ந்த சான்றுகள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. பெருங்கற்கால (MEGALITHIC) பண்பாட்டிலிருந்து கருவூரின் தொன்மை வரலாறு துவங்குகிறது.

பெருங்கற்கால சான்றுகளாக விளங்கும் ஈமச்சின்னங்களான கல்வட்டம், கல்குவை போன்றவை கருவூரை சுற்றியுள்ள பல ஊர்களில் காணப்படுகின்றன. புகளூர், காருடையாம்பாளையம், மண்மங்கலம், மலைக்கோயிலூர், மூக்கானாங்குறிச்சி, நத்தமேடு, புன்னம், வேட்டமங்கலம், அருமைக்காரன்பட்டி, கேதம்பட்டி, சனப்பிரபட்டி, உப்புப்பாளையம், சின்னான்டாங்கோயில், நெடுங்கூர், நாகம்பள்ளி, ஒத்தம்பட்டி, முன்னூர், பள்ளப்பாளையம், பவித்திரம், பரமத்தி, இராமகவுண்டன்புதூர், கொத்தபாளையம், கீழ்கேத்தம்பட்டி, கோயிலூர், கரைபாளையம், வடுகனூர், வாழ்நாயக்கன்பட்டி, காளிப்பாளையம்,

வெஞ்சமாக்கூடலூர் போன்ற பல ஊர்களில் இத்தகைய ஈமச்சின்னங்களைக் காணலாம்.

கருவூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி வட்டத்தில் நெடுங்கூர் என்ற ஊரில் காணப்பட்ட ஈமச்சின்னமான கல்வட்டம் 2006-2007 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அகழாய்வு செய்யப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

புகளூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பூமியைத் தோண்டும் பொழுது கிடைத்த கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் கருவூர் தொல்லியல்துறை வரலாற்றுக் காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கருவூர் நகரில் சின்ன ஆண்டாங்கோயில் என்ற இடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட முதுமக்கட்தாழிகளும் காட்சியில் உள்ளன. கருவூர் - திண்டுக்கல் சாலையில் அமைந்துள்ள அரவக்குறிச்சிக்கு வடமேற்கே கொத்தபாளையம் என்ற ஊர் உள்ளது. இங்கு பூமிக்கடியிலிருந்து எடுக்கப்பட்ட முதுமக்கட்தாழியிலிருந்து கிடைத்த மட்கலயங்களில் ஒரே மாதிரியான குறியீடுகள் (GRAFFITI) காணப்படுவது சிறப்பாகும்

## வரலாற்றுச் சிறப்புமிக்க மண்மேடுகள்

கருவூரைச் சுற்றியுள்ள பல ஊர்களில் நத்தமேடு என அழைக்கப்படும் பழமையான வரலாற்றுச் சிறப்புமிக்க மண்மேடுகள் (MOUNDS) காணப்படுகின்றன. இவைகளிலிருந்து கிடைக்கும் தொல்பொருட்கள் கருவூரின் தொன்மை வரலாற்றுக்குச் சான்றளிப்பவையாகத் திகழ்கின்றன. மணவாசி, பஞ்சமாதேவி, வெள்ளியனை, சோமூர், திருமுக்கூடலூர், புதுக்கோட்டை, பழைய செயங்கொண்ட சோழபுரம், மகாதானபுரம், மேட்டு திருக்காம்புலியூர் போன்ற பல ஊர்களில் மண்மேடுகள் காணப்படுகின்றன. இவைகளில் மேற்பரப்பில் கறுப்பு-சிவப்பு பானை ஓடுகள், மத்திய காலத்தைச் சேர்ந்த பானை ஓடுகள், கலையழகு மிக்க சுடுமண் பொம்மைகள் போன்றவை கிடைத்துள்ளன.

கருவூருக்கு அருகே உள்ள மண்மங்கலத்திலிருந்து மூன்று சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. இதில் ஒரு பெண் அமர்ந்த நிலையில் இருக்கிறாள். அவளது இடையில் அமர்ந்து ஒரு குழந்தை தாயிடம் பால் குடிப்பது போலக் காணப்படுகிறது. இது போன்ற வடிவமைப்புள்ள சுடுமண் பொம்மைகள் பல இடங்களில் கிடைத்துள்ளன. கருவூர் அருகிலேயே அரவாக்குறிச்சி என்ற ஊரிலும் கிடைத்துள்ளது. மேலும் திருக்காம்புலியூர் என்ற இடத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியிலும். இது போன்ற சுடுமண் பொம்மை கிடைத்துள்ளது சிறப்பானதாகும். பழனிக்கு அருகிலும் இது போன்ற பொம்மை கிடைத்துள்ளது. கொங்கு நாட்டுப் பகுதியில் குலாலக் குடும்பத்தினர் வழிபடும் செப்புத்

திருமேனிகளிலும் (FOLK BRONZES) இது போன்ற உருவங்களை செய்து வழிபடுகின்றனர். காவிரியின் வடகரையில் கொப்பட்டி அம்மன் என வழிபடுகின்றனர். தொன்றுதொட்டு வரும் பண்பாட்டுச் சிறப்பினை இங்கே நம்மால் காணமுடிகிறது.

கருவூருக்கு அருகில் திருக்காம்புலியூர் மற்றும் வடகரையில் அமைந்துள்ள அழகரை ஆகிய ஊர்களில் அகழாய்வுகள் நடைபெற்றுள்ளன. பல சுடுமண் பொம்மைகள், தானியங்களைச் சேமித்து பாதுகாக்கும் அறைகள் கொண்ட கட்டட அமைப்பு போன்ற வரலாற்றுச் சிறப்பிமிக்க ஆதாரங்கள் அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. காவிரிக்கரை நாகரீகத்தின் சிறப்பினை இவ்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன என்றால் மிகையில்லை.

கருவூரின் தொன்மைக்கு மேலும் பல சான்றுகள் காணப்படுகின்றன. கருவூரிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் சாலையில் சுமார் 20 கி:மீ. தொலைவில் அமைந்துள்ள மாயனூர் செல்லாண்டியம்மன் கோயிலிருந்து தென்மேற்கில் மண்மேடு தொடர்ச்சியாக செல்கிறது. இதனை மதிற்கரை எனவும், சேர, சோழ, பாண்டிய நாடுகளின் எல்லையைப்பிரிக்கிறது என்று கூறுவர். கொங்கு மண்டல சதகம் இதனை கொங்கு நாட்டின் கிழக்கு எல்லையாகக் குறிக்கிறது.

"மதிற்கரை கிட்டிசை தெற்கு பழனி மதிகுடக்குக்
கதித்துவ வெள்ளைமலை பெரும்பாலை கவின்வடக்கு
விதித்துள நான் கெல்லை சூழ வளமுற்று மேவிவிண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள் கொங்கு மண்டலமே"

இம்மதிற்கரையைப் பற்றி அய்யர்மலை, சேந்தமங்கலம் கோயில் கல்வெட்டுகளில் குறிப்புகள் காணப்படுகின்றன. இம்மேடு இதன் அருகில் உள்ள சங்கரமலை வழியே செல்கிறது. அம்மலையில் இயற்கையாய் அமைந்த தளத்தில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. மேலும் குளித்தலை அருகே உள்ள அய்யர் மலையில் சமண கற்படுக்கைகள் உள்ளன. இங்கு காணப்படும் தமிழி கல்வெட்டு (கி.மு. 1-ஆம் நூற்றாண்டு) **பனைதுறை வெஸன் அதட்அனம்** எனக் குறிப்பிடுகிறது. மேலும் கருவூர் அருகே உள்ள சுக்காலியூர் மலைக்குன்றுகளிலும் எழுத்துக்கள் இல்லாமல் சமண கற்படுக்கைகள் காணப்படுகின்றன.

மேலும் இம்மாவட்டத்தில் உள்ள நெரூர், திருமுக்கூடலூர், சோமூர், பஞ்சவன்மாதேவி, வெஞ்சமாங்கூடலூர் போன்ற ஊர்களில் காணப்படும் கோயில்கள்-கல்வெட்டுகள் கருவூரின் வரலாற்றுக்கு பெருமை சேர்க்கும் நிலையில் அமைந்துள்ளன.

# கருவூர் வரலாறு

தமிழக வரலாற்றில் கருவூர் இன்றியமையாத இடத்தை பெற்று விளங்கியுள்ளது. ஆன்பொருநை ஆற்றங்கரையில் அமைந்து விளங்கிறது. இக்கருவூரே சங்க காலச் சேரமன்னர்களில் தலைநகராகும். இதுவே வஞ்சி எனவும் பெயர் பெற்றிருந்தது.

சங்க காலத் தொடக்கத்திலிருந்தே கருவூர்- வஞ்சி ஒரு பெருநகராகத் திகழ்ந்தது. இலக்கியம், கல்வெட்டுக்கள், காசுகள், அகழாய்வு ஆகிய அனைத்து சான்றுகளும் கருவூரின் தொன்மையை எடுத்துக் கூறுகின்றன.

சேரமன்னர்களின் முதல் மன்னனாகக் கருதப்படுவர் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன். இவன் மகன் யவனவரை வெற்றிகண்டான். இவன் யவனர்கள். தமிழகத்திற்கு வந்த காலத்தில்தான் ஆண்டிருக்க வேண்டும். இங்கு யவனர்கள் எனக் குறிக்கப்படுபவர் ரோமானியரே. இவர்கள் கி.மு. முதலாம் நூற்றாண்டில் தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்துள்ளனர். நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் ஆகியோரது காலத்தில் உதியஞ்சேரல் கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவன் எனக் கொள்வதில் தவறில்லை. ஆதலின் கருவூர்-வஞ்சி கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் ஒரு சிறந்த தலை நகராகத் திகழ்ந்தது என்பது தெளிவு.

சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை என்ற அரசன் கருவூரில் இருந்து ஆண்டான். அவன் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவருடன் மேல்மாடத்தில் அமர்ந்திருந்தான். அப்பொழுது முடித்தலைக் கொப்பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னன் தன் யானை மீதுமர்ந்து கருவூர் வருவதைக் கண்டான். சோழனுடைய யானை மதம் பிடித்து வழி தவறிக் கருவூர் வந்தது. ஆனால் அதைக் தவறாகக் கருதி சோழனைக் கொன்று விடப் போகிறான் என்று எண்ணிய உடனிருந்த புலவர் முடமோசியார் உண்மையினை எடுத்துரைத்த செய்தி புறப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து கருவூர் சோழ நாட்டில் எல்லைக்கு அருகாமையில் இருந்தது என அறிகிறோம். சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையும் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என அறிகிறோம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தனது மாற்றரசர்களை அவர்களது தலைநகரில் தோற்கடித்தான். மாந்தரஞ் சேரலிரும்பொறை பாண்டியன் நெடுஞ்செழியனால் சிறைபடுத்தப்பட்டான். பின்னர் சிறையிலிருத்து நீங்கி மீண்டும் தன் அரியணை ஏறினான் என்று புறநானூறு (புறம் 17)-இல் கூறப்பட்டுள்ளது.

சோழன் நலங்கிள்ளியும் கரூவூரைக் கைப்பற்றினான். அவனைப் பாடும் கோவூர்க்கிழார் அவன் 'பூவா வஞ்சியையும் தருகுவன்' எனக் கூறுகிறார். இதற்கு உரையாசிரியர் பூவா வஞ்சியென்பது கரூவூருக்கு வெளிப்படை எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கருவூர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனால் முற்றுகையிடப்பட்டது. ஆலத்தூர் கிழார் இதைச் சிறப்பாகப் பாடியுள்ளார். இம்முற்றுகையின் போது சேரன் தன் அரண்மனையை விட்டு வெளியே வரவில்லை. சோழர் படை கரூவூர்க் காவற்காடுகளை அழித்தது. அவ்வாறு வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்கள் ஆன்பொருநையாற்றில் மணலைச் சிதைத்தன. சோழன் வஞ்சி மாநகரை வாட்டுவதை நேரில் கண்ட ஆலத்தூர்க் கிழார் புறம் 36-ல்

சிலம்பில் குறுந்தொடி மகளிர் பொலஞ் செய்
கழங்கில் தெற்றியாடும் தன்னான் பொருநை
வென் மணல் சிதைய

என்று பாடுகிறார்.

கிள்ளிவளவன் கரூவூரை முற்றுகையிட்டிருந்தபோது அதை நேராகக் கண்ட மற்றொரு புலவரான மாறோக்கத்து நப்பசலையாரும் சோழனுடைய ஆற்றலைப் பாடியுள்ளார். (புறம் 377:39). அப்பாடலில் கரூவூரைச் சுற்றி ஆழ்ந்த அகழிகள் இருந்தன. அவற்றில் நீர் மிகுந்திருந்தது. அவற்றில் முதலைகள் சுற்றித்திரிந்தன. அவ்வூரை நீ அழிக்கிறாய். சேரனது அழிவில்லாத கரூவூரை அழிக்கும் நினது பெருமை எனவும் பாடியுள்ளார்.

இமயஞ் சூட்டிய எம விற் பொறி
மான்வினை நெடுந்தேர் வானவன்
தொலைய வாடா வஞ்சி
வாட்டு நின் பீடு

எனப்பாடுகிறார். இக்கரூவூர்ப் போரில் சேரன் தோற்றான். குராப்பள்ளியில் துஞ்சிய கிள்ளிவளவனும் கருவூரை கைப்பற்றியிருக்கிறான் எனப் புறப்பாட்டு 373 கூறுகிறது.

சேரன் செங்குட்டுவனின் தலைநகர் வஞ்சியே என்பதில் ஐயமில்லை. செங்குட்டுவன் ஆண்ட வஞ்சி ஆன்பொருநைக் கரையில் இருந்தது எனச் சிலம்பு கூறுகிறது.

வாழியரோ வாழி வரு புலல்
நீர் ஆன்பொருநை
சூழ் தரும் வஞ்சியார் கோமான்
தன் தொல்குலமே - (சிலம்பு - வாழ்த்து - 4)

காவிரியாற்றோடு ஆன்பொருநையும், குடவனாறும் கலக்கும் கடல் போன்றவன் செங்குட்டுவன் என்று பரணர் பதிற்றுப்பத்தில் பாடுகின்றார். கூடல் என்பது கரூவூரின் அருகே உள்ளது. இங்கு ஆன் பொருநையாறு காவிரியாற்றில் கலக்கிறது என்பது தெளிவு. தற்பொழுது இவ்வாறு அமராவதி என அழைக்கப்படுகிறது.

கருவூர் ஆன்பொருநைக் கரையில் இருந்தது என்றும் அது சேரர்களின் தலைநகராயிருந்தது என்று அகநானூற்றுப் பாடல் ஒன்று கூறுவதிலிருந்து அறியலாம்.

கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திருமாவியல் நகர் கருவூர் முன்துறை

பாவை பாடிய பெருங்கடுங்கோ கருவூரில் இருந்து ஆட்சி செய்தான் எனவும் ஆன்பொருநை ஆற்றங்கரையில் இருந்த வஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டவன் எனவும் புறப்பாட்டில் (11) கூறப்படுகிறது.

தன்பொருநைப் புனல் பாயும்

வின்பொரு புகழ் விறல் வஞ்சி (புறம் 11)

மேலும் புறநானூற்றில்

வஞ்சிப் புறமதில் அலைக்கும் கல்வென்

பொருனை (புறம்-387) என்று கூறப்படுகிறது.

இதனால் கருவூர் ஆன்பொருநை எனப்படும் அமராவதி ஆற்றில் கரையில் இருந்தது என்பதற்கு சான்றுகளாக அமைகின்றன.

### வெளிநாட்டார் குறிப்புகள்

கிரேக்க நிலநூல் வல்லுநரான தாலமி என்பார் '**கொரேவூரா**' என்றும் ஒரு இடத்தினைக் குறிக்கிறார். உள்நாட்டு நகர்களில் அரசிருக்கையாக **கொரேவூரா (கருவூர்)** உளது என்ற அவர் குறிப்புகளிலிருந்து அறியமுடிகிறது.

## பாண்டியர் ஆட்சியில்

கி.பி.7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்னும் பாண்டிய மன்னன் ஆண்டான். இவனே கூன் பாண்டியன் என்றும் நெய்வேலி வென்ற நெடுமாறன் என்றும் புகழ் பெற்றவன். இவன் மீது பாண்டிக் கோவை என்னும் நூல் இயற்றப்பட்டுள்ளது. இதில் பாண்டிய மன்னன் பல முறை சேரனை வெற்றிக் கண்டான் எனக் கூறப்பட்டுள்ளது. இதே செய்தியை வேள்விக்குடிச் செப்பேடும், சின்னமனூர்ச் செப்பேடுகளும் கூறுகின்றன.

## பல்லவர் ஆட்சியில்

சற்றேறக்குறைய இதே காலத்தில் பல்லவப் பேரரசு காவிரியாற்றங்கரை வரையில் தனது ஆட்சியை விரிவாக்கியது. பல்லவ பேரரசர்களில் சிம்மவிஷ்ணு. நரசிம்மனாகிய மாமல்லன் ஆகிய இருவரும் சேரர்களைத் தோற்கடித்ததாகக் கூறுகின்றனர். இப்போர்கள் கருவூருக்கு அண்மையில் நடைபெற்றனவா எனத் தெரியவில்லை. ஆயினும் பல்லவர்களும், சேரர்களும் நட்பு பூண்டனர் எனக் கொள்ளவும் இடமிருக்கிறது. வளர்ந்து வரும் பாண்டிய பேரரசை எதிர்த்து இவர்கள் இணைந்திருக்க வேண்டும்.

கி.பி.730-லிருந்து 765 வரை ஆட்சி செய்த தேர்மாறன் என்று புகழ்பெற்ற மாறவர்மன் ராஜசிம்மன் இப்பகுதி மீது போர் தொடுத்திருக்கிறான். இவன் காவிரியைக் கடந்தான். மழகொங்கம் அடிப்படுத்தினான். பாண்டிக் கொடுமுடி சென்றான். அங்கு பசுபதியைப் பணிந்தான் என வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

இராஜசிம்மனுக்குப் பிறகு அவன் மகன் பராந்தக நெடுஞ்சடையன் மீண்டும் இப்பகுதியில் மீது படையெடுத்தான். இவன் பல்லவனைக் காவிரியின் தென் கரையில் பென்னாகடத்தில் வென்றான். பின்னர் வடகரையில் ஆயிரவேலி அயிலூரிலும், புகழியூரிலும் அதியனை வென்றான். இப்பகுதி அதியன் கீழிருந்தது. அதியனுக்கு உதவியாகப் பல்லவனும் கேரளனும் வந்தனர். அவர்களை நெடுஞ்சடையன் வென்றான் என சீவரமங்கலம் செப்பேடு கூறுகிறது.

புகளூர்ச் சண்டைக்குப் பிறகு அதே போரின் தொடர்ச்சியாகக் கருவூரிலும் போர் நடந்திருக்கிறது. கருவூரில் பல்லவனும் கேரளனும் பாண்டியனை எதிர்த்துத் தோற்றிருக்கின்றனர். இதனை தளவாய்புரச் செப்பேடு.

காடவனைக் கரூரில் கால் கலங்க
களிறுதைத்த கடவர் கோன்

எனக் கூறுகிறது. ஆனால் இக்கருவூர் வெற்றி நிரந்தரமான வெற்றியாக இல்லை. இப்போரில் முதலில் தோற்ற பல்லவ மன்னன் நந்திவர்மன் பல்லவ மன்னன் ஆவான். இவன் மீண்டும் கரூவூரைத் தாக்கி பாண்டியனிடமிருந்து அதைக் கைப்பற்றியிருக்கிறான். இம்மன்னனின் சமகாலத்தவரான திருமங்கையாழ்வார் இம்மன்னனின் வெற்றிகளை பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில் பாடியுள்ளார்.

உலகுடை மன்னவன் தென்னவனைக்
கன்னி மாமதில் சூழ் கருவூர் வெருவப்
பலபடை சாய வென்றான்

எனவே பல்லவ மன்னர்களின் ஆட்சிக்கு கரூவூர் உட்பட்டிருந்தது என்பதை அறியமுடிகின்றது.

இதே காலத்தைச் சேர்ந்த கருவூர் நடுகற்களில் ரவிகோ கலியன் என்பவனைப் பற்றியும், வஞ்சி வேளடியான் என்பவனைப் பற்றியும் குறிப்பு காணப்படுகின்றது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கருவூர்ப்பகுதியை மீண்டும் கைப்பற்றியிருக்கின்றனர் என அறிய முடிகிறது.

**சோழர் காலத்தில் :** சங்க கால சேரர்களுக்குப் பின்னர் கருவூர் சில காலம் சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கருவூர் சோழர்களின் குல மரபில் முதல் தனி நகர் எனக் கூறப்படுகிறது. சோழ நாட்டில் கரிகாலனுக்கு ஆபத்து நேர்ந்த போது சேர மன்னர்கள் உதவியுள்ளார்கள். கருவூரிலிருந்து கரிகாலன் சோழ அரியணை ஏறியதால் கருவூரைச் சோழர் குல மரபில் தனிநகர் எனக் குறிப்பர்.

கருவூர் சோழராட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை எறிபத்தர் வரலாற்றில் ‘‘மன்னிய அநாபயன் சீர் மரபில் மாநகரமாகும் தொன்னெடுங் கருவூர்’’ எனக் சேக்கிழார் பெருமான் போற்றுகின்றார்.

புகழ்ச்சோழரும் கருவூரை ஆட்சி செய்திருக்கிறார். அன்றிருந்த கருவூரின் சிறப்பை சேக்கிழார் வாக்கால் அறியலாம். அதியமான் திறை கொண்டு வராததால் அவரது அரணை தூளாக்க அரசன் ஆணையிட்டார். சோழரது படை அதிகன் படையோடு குறும்பொறையூர் என்னுமிடத்திலும், நொச்சி என்னுமிடத்திலும் மோதியது. அச்சண்டையில் அதிகன் படை தோற்கடிக்கப்பட்டது.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கருவூர் சோழப் பேரரசின் கீழ் கொண்டு வரப்பட்டது. ஆதித்த சோழன் கொங்குநாட்டைக் கைப்பற்றினான். முதல்

இராஜராஜன் காலத்தில் இப்பகுதி கேரளாந்தக வளநாடு எனப் பெயர் பெற்றது. இராஜராஜன், தனது தூதனைச் சேர மன்னன் சரிவர நடத்தவில்லை என்ற காரணத்தால் ஒரே பகலில் 13 சுரங்களைக் கடந்து மலைநாட்டைப் பிடித்தான் என உலாக்கள் கூறுகின்றன. சேரனை வென்று கேரளாந்தகன் எனப் பெயர் பெற்றான். சேரன் ஆண்ட பகுதி கேரளாந்தக வளநாடு எனப் பெயர் மாற்றி அமைக்கப்பட்டது. இது பின்னர் அதிராஜமண்டலம் எனவும் பெயர் பெற்றது.

கருவூரில் இராசேந்திரன், இரண்டாம் ராசேந்திரன், வீரராசேந்திரன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன.

## முடிவழங்கு சோழபுரம்

மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சி தொடங்குவதற்குச் சற்று முன்னர் கருவூர் சேரர்களால் மீட்கப்பட்டது. ஆதலின் மூன்றாம் குலோத்துங்கன் கருவூரின் மீது படையெடுத்தான். கருவூர்ப் போர் மிகவும் கடுமையாக நடந்திருக்க வேண்டும். குலோத்துங்க சோழனுடைய மெய்க்கீர்த்தி ‘‘கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட’’ என்று கூறுவதிலிருந்து அவ்வெற்றியை அவன் எவ்வளவு சிறப்பாகக் கருதினான் என்பதை அறிய முடிகிறது. கொங்கு நாடு சோழ கேரள மண்டலம் எனப் பெயர் பெற்றது சேரன் குலோத்துங்கனை வணங்கினான். அவனது முடி மீண்டும் வழங்கப்பட்டது. கரூவூர் முடி கொண்ட சோழபுரம் எனப் பெயர் பெற்றது. இதை இவனது மெய்க்கீர்த்தி.

‘‘பூழியர் கெடக் கொங்கும் பாழ்படப்
பொருது புக்குக் கருவூரில் சோழ
கேரளன் என்று மன்னர் தொழ
விசைய மாமுடி சூடி எனக் குறிக்கிறது.’’

மூன்றாம் இராசராசன் காலத்தில் போசளர்கள் இங்கு வந்துள்ளனர். இதன் பின்னர் பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்கு மாறியது என்பதற்குச் சான்றாக சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகள் இப்பகுதியில் காணப்படுகின்றன.

விஜயநகர மன்னர், நாயக்க மன்னர் காலத்திலும் கருவூர் அவர்களது ஆட்சியின் கீழ் இருந்துள்ளது என்பதை அக்காலத்தியக் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. கருவூர் பசுபதீசுவரர் கோயிலில் சொக்கலிங்க நாயக்கரின் கல்வெட்டு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## பிற்காலத்தில்

கர்நாடகப் பகுதிகளைத் வெற்றிக் கொண்ட ஹைதர் அலியும் கருவூரை வெற்றிகொண்டான். கி.பி.1706-இல் ஆங்கில தளபதி கேப்டன் ரிச்சர் ஸ்மித்தின் படையெடுப்பையும், தஞ்சை மராட்டிய வேந்தன் துளசாஜியின் படையெடுப்பையும் கருவூர் கண்டது. வரலாற்றுப் புகழ்மிக்க ஆங்கில-மைசூர்ப் போர்களில் கருவூர் பகுதியும் முக்கிய இடம் பெற்று விளங்குகிறது. இறுதியாக கருவூர் பகுதியும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டது.

கருவூர் சங்க காலத்திலிருந்து தொடர்ச்சியாக பல்வேறு மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை அறிய முடிகிறது.

# கருவூர் – வஞ்சி

## கருவூருக்கும் வஞ்சிக்கும் உள்ள தொடர்பு

மேற்குக் கடற்கரையில் உள்ளது வஞ்சி. திருச்சிக்கு அருகில் உள்ள கருவூர் சேரர்களின் தலைநகர் அல்ல என்பர் சில ஆய்வாளர்கள். கருவூர் ஆன்பொருநை ஆற்றின் கரையில் உள்ளது என்பதையும், கருவூர்-வஞ்சியும் ஒன்றே என்பதையும் சங்க இலக்கியங்களினால் அறிய முடிகிறது. புறநானூறு, சிலம்பு, பதிற்றுப்பத்து ஆகியவற்றின் உரையாசிரியர்கள் கொங்குக் கருவூரே வஞ்சி எனக் கூறுகின்றனர்.

சேரரது ஆட்சிக் கொங்குக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு மேலைக் கடற்கரை வரைப் பரவி இருந்தது. கருவூருக்கு நேர் மேற்கில் அமைந்துள்ள பாலக்காட்டுக் கணவாயே இதற்கு ஏதுவாக இருந்தது. பேரியாறு சேரரது நாட்டுக்குள் ஓடும் ஆறு ஆகும். வஞ்சி பேரியாற்றங்கரையில் இருந்ததற்கான சான்று ஏதும் இல்லை. ஆகவே சேரன் செங்குட்டுவனிருந்து ஆண்ட வஞ்சி கருவூரேயாகும்.

சங்க காலத்திற்கு பின்னர் மூவேந்தர்கள் வலிவிழந்தனர். பல்லவர்-பாண்டிய பேரரசுகள் ஒன்றையொன்று சந்திக்கும் தளமாக திருச்சி கருவூர் பகுதி விளங்கியது. சேரர் குடி இடம் பெயர்ந்தது. மேற்குக் கடற்கரைப் பகுதியில் கொடுங்கோளூர் என்ற மகோதை என்ற இடத்தில் தமது தலைநகரை அமைத்துக் கொண்டனர். இது சற்றேறக்குறைய 7-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆயினும் கொங்குக் கரூர் தொடர்ந்து கருவூர் என்றும் வஞ்சி என்றும் பல நூற்றாண்டுகளுக்கு வழங்கப்பட்டது.

முதலில் அஞ்சைக்களம் என்றும் மகோதை என்றும் வழங்கப்பட்ட நகரமே கொடுங்கோளூர் எனப் பெயர் பெற்றிருந்தது. காலப்போக்கில் சேரர் பற்றிய வரலாறும், இலக்கியங்களும் பண்டைய வஞ்சி என்றும் பெயரும் கொடுங்கோளூர்ப் பகுதியில் நிலைபெறத் தொடங்கியிருக்க வேண்டும். இதுவே 9,10-ஆம் நூற்றாண்டில் வழக்கில் இருந்திருக்கக்கூடும். 12-ஆம் நூற்றாண்டிற்கும் பிற்பட்ட சுகசந்தேசம், கேரரேளாத் பத்தி என்னும் நூல்கள் வஞ்சியை மேலைக் கடற்கரையில் உள்ள நகர் என்பதும் பிற்கால வழக்கத்தையே எடுத்துக்காட்டுகிறது. கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள், அகழாய்வு அனைத்தும் கொங்குக் கருவூரே சங்க கால சேரர் தலை நகர் வஞ்சி என்பதை மெய்ப்பிக்கின்றன.

## இலக்கிய குறிப்புகள்

கருவூர் ஆன்பொருநைக் கரையில் இருந்தது என்றும் அது சேரர்களின் தலைநகராக இருந்தது என்பதை அகநானூறு கூறுகிறது.

கடும்பகட்டு யானை யானை நெடுந்தேர்க்கோதை
திருமாலியல் நகர் கருவூர் முன்துறை

புறப்பாட்டில் (11) பேய் மகள் இளவெயிலி 'பாவை பாடிய பெருங்கடுங்கோவைப்' பாடியுள்ளார். அதில் பெருங்கடுங்கோ ஆன் பொருநை ஆற்றின்கரையில் இருந்த வஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டவன் எனப்பாடுகிறார்.

தன்பொருநைப் புனல் பாயும்
விண் பொரு புகழ் விறல்வஞ்சி.

**வஞ்சி:**

வஞ்சி மாநகர் முல்லை மருத நிலங்களுக்கு இடையே உள்ளது என்பதை புறநானூறு கூறுகிறது.

வஞ்சி.... பொருநை மணலினும் ஆங்கட்
பல்லூர் சுற்றிய கழனி
எல்லாம் விளையும் நெல்லினும் பலவே. (புறம்-357)

தன் பொருநை சூழ் தரும் வஞ்சியர் கோமான் (சிலம்பு - காதை-29)

வஞ்சிப்புறமதில் அலைக்கும் கல்வெல் பொருநை
தண்ணான் பொருநையாடு நரிட்ட
எண்ணமும் சுண்ணமும் மலரும் பரந்து
விண்ணுகற விற்போல் விளங்கிய பெருந்துரை
(சிலம்பு-காதை-27 வரி-237-39)

## கருவூரின் பெயர்கள்

**பேரூர்ப்புராணம்:**

ஆன்டுத்துயர் பூசசை யாற்றிய கிலமும்
தானளித்தவினாற் கருவூரெனத் தக்கது
வானெடுத்தெழும் வஞ்சி பசுபதியாயிற் ஒன்றே

**கந்தபுராணம்:**

காவளைத்த வயற் கருவூர் வாழ் காமாசேர்
முசுகுந்தன் இடம்

**பெரியபுராணம்:**

பொழில் மருவுங்கருவூர் வாழ் புகழார் சோழர்
அந வாயன் சீர்மரபின் மாநகரமாகும் தொல்னெடுங்
கருவூர் என்னும் சுடர் மலி மூதூர்

**தேவாரம்:**

கருவூரானிலை

## கருவூர் தல புராணம்:

அமராவதி ஆற்றின் கரையில் உள்ள வஞ்சுலாரண்யத்தில் காமதேனு சிவலிங்கத்தைப் பூசித்து சிருஷ்டித் தொழில் புரியத் தொடங்கியதால் கருவூர் என்று பெயர் வந்தது.

கருவூர் ஆதிபுரம், கருவைப்பதி, வஞ்சுளாரண்யம், கர்பபுரம், பாஸ்கரபுரம், வீரசோழபுரம், சண்மங்கல சேத்திரம் எனவும் பெயரிட்டு அழைக்கப்பட்டதை அறிய முடிகிறது.

## புகழ்ச்சோழர்:

உறையூரைத் தலைமை இடமாக கொண்டு ஆண்ட சோழ மன்னர்களுள் புகழ்ச்சோழரும் ஒருவர். புகழ்ச்சோழர் ஒரு குடைக்கீழ் முறை தவறாது ஆட்சி செய்ததுடன் அரு மறை சைவம் தழைக்க அரசாண்டார் என்கிறார் சேக்கிழார் பெருமான்.

ஆண்டிற்கொருமுறை கருவூரில் வந்து தங்கி தம் கீழ் வாழும் சிற்றரசர்கள் திறை செலுத்துவதைப் பெற்றுக் கொண்டிருந்தார். திறை செலுத்தாமல் அதியன் என்னும் மன்னன் உள்ளான் என அமைச்சர்கள் கூறினார். அரசனுடைய ஆணையை மேற்கொண்டு அமைச்சர்கள் படையோடு சென்று அதியனின் கோட்டையை முற்றுகையிட்டனர். அப்போர் மிக விரைவாக முடிந்துவிட்டது என சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

> ‘மலையொடு மலைகள் மலைந்தன
> அவை மத அருவி தொழிப்போடு
> சிலையினர் விசையின் மிசைத்தெறு
> கொலைமத கரி கொவை உற்றலை வே’

போர் முடிந்ததும் அதியன் ஓடி ஒளிந்தான். இறந்துபட்ட முக்கியமான வீரர்களின் தலைகளை ஒரு கூடையில் வைத்து ஏந்திக் கொண்டு சோழனுடைய அமைச்சர்கள் கருவூர் வந்து சேர்ந்தனர். அத்தலைகளை ஒவ்வொன்றாகக் கண்டார் புகழ்ச்சோழர், பல்வேறு தலைகளின் நடுவே சடைமுடியுடன் கூடிய ஒரு தலையைக் கண்டார். சிவபெருமானுடைய நெறியை பின்பற்றும் அடியவரின் தலையை கண்டு மிகவும் மனம் வருந்தினார். தன்னால் ஏற்பட்ட இக்கொடுமைக்கு பரிகாரமாய் அமைச்சர்களை அழைத்து தன் மைந்தனுக்கு முடிசூட்ட புகழ்ச்சோழர் கட்டளை இட்டார். ஒரு தங்க தட்டில் சிவனடியாரின் வெட்டுண்ட தலையைத் தாங்கிக் கொண்டு தீ வளர்த்து அதனுள் புகுந்துவிட்டார். அத்தகைய பெருமைவாய்ந்த புகழ்ச் சோழர் ஆண்ட ஊர் கருவூராகும்.

# கல்வெட்டுகளில்-செப்பேடுகளில் கருவூர்

கருவூர் - புகழூர் ஆறு நாட்டார் மலை கல்வெட்டுகளில் ஒன்றில் கருவூர் பொன் வாணிகன் அதிட்டானம் என்று குறிப்பிடப்படுகிறது. 'கருவூர்' எனக் குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டு கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கூறப்படுகிறது.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் கல்வெட்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

## தளவாய்புரச் செப்பேடு

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் பெரும்புகழுடன் ஆட்சி புரிந்த ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையன் இடையாறை, வெண்பைக்குடி ஆகிய இடங்களில் எதிரிகளை புறமுதுகிட்டு ஓடச் செய்துவிட்டு வெற்றி வலம் வருகையில் காடவனைக் கருவூரில் வென்றான் என்று தளவாய்புரச் செப்பேடு கூறுகிறது.

## கருவூர் நடுகற்கள்

கருவூரில் இரண்டு நடுகற்களை தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது.

1. ஒன்றில், ''ஸ்ரீவிகோ கலிய மகந் கருவூரிடைஆ தந்நிரை கொளவெறிந்து பட்டான்'' என்றும்
2. மற்றொன்றில், ''ஸ்ரீவஞ்சி வேளடியாந்'' என்றும் காணப்படுகிறது.

இரண்டிலும் மன்னன் பெயர் குறிப்பிடப்படவில்லை. கி.பி.8,9-ஆம் நூற்றாண்டுகளில் இவ்வூர் கருவூர் என்றும், வஞ்சி என்றும் வழங்கப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

இடைக்கால சோழ மன்னர்கள் காலத்தில் கருவூர் சோழர்களின் ஆதிக்கத்தில் கீழ் இருந்து வந்தது என்பது சோமூர் கல்வெட்டிலிருந்து புலனாகிறது.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சோழக் கட்டிலில் அமர்ந்து அரசு புரிந்த ராசசேந்திர சோழனின் (கி.பி.1064-70) காலத்தில் அதிராஜராஜ மண்டலத்தைச் சேர்ந்த வெங்கால நாட்டில் அடங்கிய ஊராகக் கருவூர் இருந்ததாக கருவூர் பசுபதீசுவரர் கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது.

## முடிவழங்கு சோழபுரம்

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (1178-1216) அதிராஜமண்டலம் என்பது கொங்கன சோழ கேரள மண்டலம் என அழைக்கப்பட்டுள்ளது. இக்கால கல்வெட்டுகளின் வெங்கால நாட்டில் கருவூர் என்னும் முடிவழங்கு சோழபுரம் அடங்கியிருந்ததாக அறியப்படுகிறது. கருவூர், முடிவழங்கு சோழபுரம் என அழைக்கப்பட்டதையும் காண்கிறோம்.

இம்மன்னன் காலத்தில் சேரரது கிளையைச் சார்ந்த ஒரு மன்னன் சிறப்போடு ஆட்சி புரிந்திருக்க வேண்டும். அம்மன்னனை தோற்கடித்து கருவூரை மூன்றாம் குலோத்துங்க சோழன் கைப்பற்றியிருக்க வேண்டும். எனவே தான் தனது கல்வெட்டுகளில் 'ஈழமும் மதுரையும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும்

கொண்ட கோப்பரகேசரி' என்று புகழ்ந்து கூறிக் கொள்கிறான். சாதாரண ஊராக இருந்திருந்தால் அதனை வெற்றிக் கொண்டதாக குறிப்பிட்டிருப்பதற்கு வாய்ப்பில்லை.

## நெரூர் கல்வெட்டு

கரூருக்கு அருகில் உள்ள நெரூர் பெருமாள் கோயில் கல்வெட்டில் வஞ்சி மாநகரமான கரூவூர் எனக் குறிப்பிடப்படுகிறது. கருவூருக்கு வஞ்சி என்னும் பெயர் தொடர்ந்து வழக்கில் இருந்து வந்ததும் அறியப்படுகிறது.

மேலும் வஞ்சி மாநகரமான கரூர் என்ற பசுபதீசுவரர் கோயில் கல்வெட்டும், வஞ்சி ஸ்ரீ வைஷ்ணவரோம் என்று கரூர் அரங்கநாதர் கோயில் கல்வெட்டும் கூறுவதிலிருந்து 12-ஆம் நூற்றாண்டு வரை கரூர் எனவும் இது பெயர் பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை.

## புகளூர் சேரர் கல்வெட்டு

கரூர் வட்டத்தில் காவிரியின் தென்கரையில் ஆர்நாட்டாமலை என்ற சிறிய குன்று உள்ளது. அடிவாரத்தில் உள்ள ஊர் வேலாயுதம்பாளையம் எனவும் அழைக்கப்படுகிறது. மேலும் இவ்வூர் புகளூர், புகழியூர், புகழிமலை என வழங்கப்படுகிறது.

மலைக்கு செல்லும் வழியில் சமண முனிவர்கள் தங்கிய இடம் ஒன்று உள்ளது. இங்கு சமணபடுக்கைகள் உள்ளன. இதில் பண்டைய சேர மன்னர்களைப்பற்றி குறிக்கும் கல்வெட்டுகள் உள்ளன.

1. மூ தா அமணன் யாற்றூர் செங் காயபன் உறைய்
   கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
   பெருங்கடுங்கோன் மகன் இளங்கடுங்கோ
   இளங்கோ ஆகி அறுத்த கல்.

எனத் தமிழ் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது

2. மூதா அமன்னன் யாற்றூர் செங்காயபன் உறைய்
   . . . . கோ ஆ . . . வ்விரும்பொறை மகன் பெருங்
   கடுங்கோன் மகன் கடுங்கோன்ளங்கடுங்
   . . . . . . . . கோளங்கோ ஆக அறுபிதகல்
   . . . . . . . . . . . .
3. யாற்றூர் செங்காயபன்
4. கொற்றந்தைள் ளவன் மூன்று
5. கருவூர் பொன் வாணிகன் நத்தி அதிட்டானம்
6. நல்லி ய் ஊர் பிடந்தை மகள் கீரன் கொற்ற
7. நல்லி[ய்] ஊர் பிடன் குறும் மகள் கீரன் கொறிசெயிபிதபளி

வடபுறமுள்ள குகைத்தளத்தில் பல படுக்கைகள் உள்ளன. அவற்றில் ஒன்றில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்தில் னாகன் மகன் பெருங்கீரன் என எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளிலிருந்து பல அரிய

செய்திகளை நாம் அறிய முடிகிறது. இதில் ஒரு பொன் வாணிகன் கருவூரைச் சேர்ந்தவனாகக் குறிக்கப் பெறுகிறான். கருவூர் இங்கிருந்து மிக அருகாமையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. புகளூர் கல்வெட்டில்

1. கோ ஆதன் சேரலிரும்பொறை
2. அவன் மகன் பெருங்கடுங்கோ
3. அவன் மகன் இளங்கடுங்கோ

என்ற மூன்று மன்னர்கள் குறிக்கப்படுகின்றனர். இக்கல்வெட்டு பெருங்கடுங்கோ காலத்தது, அவனது மகன் இளங்கோ பட்டம் எய்திய போது யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்ற சமணப் பெரியார்க்குப் பள்ளி அமைத்து கொடுத்ததை இது குறிக்கிறது.

சங்க இலக்கியங்களில் பதிற்றுப்பத்து என்னும் நூல் சேர அரசர்கள் பதின்மரைப்பற்றி ஆளுக்குப் பத்து பாட்டு வீதம் பத்துப் புலவர்களால் பாடப்பபட்ட நூல் ஆகும். அவற்றில் ஏழாம் பத்தின் தலைவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரன் இரும்பொறை, ஒன்பதாம் பத்தின் தலைவன் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை இவர்களே கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன கோ ஆதன் செல்லிரும்பொறை பெருங்கடுங்கோ மற்றும் இளங்கடுங்கோ ஆகிய மன்னர்கள் ஆவர்.

சங்க இலக்கியங்களில் காணப்படும் செய்திகள் கல்வெட்டுகளினால் உறுதி ஆகிறது. சேர மன்னர்களில் இரும்பொறை வழியினர் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர் என்பதும் அறிய முடிகிறது. இக்கல்வெட்டுகள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமாகப் போற்றி பாதுகாக்கப்படுகிறது.

## பாண்டியர் செப்பேடு

பாண்டிய மன்னன் அதிய மன்னன் ஒருவனுடன் போர் செய்து வெற்றி கொண்டதாகக் கூறும் மெய்க்கீர்த்தியில் புகளூர் (புகழியூர்) குறிக்கப்படுகிறது.

மாஇரும் பெரும் புனற் காவிரி வடகரை
ஆஇரவேலி அயிரூர் தன்னினும்
புகழியூரும் திகழ்வேவதியனை
ஒடு புறங்கண்டவன்

இவ்வூரில் உள்ள சிவன் கோயில் மேக பாலீச்சரமுடையார் என்று அழைக்கப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டில் தென் கிழக்கு நாட்டுப் புகழியூர் எனக் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப்பற்றிய ஒரு பாடல் சுவையானது.

பேச்சிலே தப்பிலி முக்குளத்திவே யொட்டனென்றும்
பிறவாத தொண்டன்

வீச்சிவே மீன் விழுங்கி விழப்பரம்ப வென்று மிக
மெய் வெண்ணிற்றின்
பூச்சிவே பித்தனென்றும் புகழியூர்ப் பெருமானே
புலவேரரும்மை
யேச்சிலே யேச மிக வேக்க முற்று நட்டாற்றி
வீரங்கினிரே.

மலை மீது முருகன் கோயில் ஒன்றுள்ளது. சிறப்பான வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. கோயிலுக்கு மகாமண்டபம் கட்டுவித்தார்கள். தயிலம்மாள், வயிரம்மாள் ஆவர். இங்குள்ள தூண்களில் இருவரின் உருவமும் காணப்படுகின்றன. பெயர்களும் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

அருணகிரிநாதர் புகழிமலை வேலவனைப் பாடி போற்றியுள்ளார். காங்கேயம் அட்டாவதானம் சேசாச்சலக் கவிராயர் என்பவர் பாடிய புகழிமலைப் பதிகம் இலக்கிய சுவை உடையது. எனவே வரலாற்றுச் சிறப்புடைய மலையாக ஆர்நாட்டார் மலை விளங்குகிறது.

## சங்கப் புலவர்கள்

கருவூரைச் சேர்ந்த தமிழ்ப்புலவர்கள் சங்ககாலத்தில் பல சிறந்த பாக்களை இயற்றி உள்ளனர். அவற்றுள் சில சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சங்கப் பாடல்களை இயற்றியுள்ள புலவர்கள் சிலர் கீழே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| கருவூர்கதப்பிள்ளை | நற்றிணை - 135ஆம் பாடல்<br>குறுந்தொகை முல்லை - 64<br>குறிஞ்சி- 265 பாலை . 380<br>புறநானூறு - 380 |
| கருவூர்கதப்பிளைச்சாத்தனார் | நற்றிணை பாலை -343<br>அகநானூறு பாலை - 309<br>புறநானூறு - 168 |
| " கிழார் | குறுந்தொகை குறிஞ்சி - 170 |
| " கண்ணப்பாளனார் | அகம் 180 நற்றிணை பாலை -148 |
| " கலிங்கத்தார் | அகம்-183 |
| " கோசனார் | நற்றிணை-214 |
| " சேரமான் சாத்தன் | குறுந்தொகை-268 |
| " நன்மார்பனார் | அகம்-227 |
| " பவுத்திரனார் | குறுந்தொகை முல்லை -162 |
| " பூதஞ்சாத்தனார் | அகம்-50 |
| " பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் | புறம் |
| " ஓதஞானி .. | குறுந்தொகை பாலை<br>71-நெற்-227, அகம்-63<br>நற்றிணை -159 |

# காலப் பகுப்பும் பண்பாடும்
## (Cultural Sequence and Chronology)

ஒரு அகழாய்வில் பல்வேறு மண்அடுக்குகளில் (பாளநிலைகளில்) கிடைக்கும் வரலாற்றுச் சான்றுகளை ஒன்றுபடுத்தி பார்க்கும் பொழுது அப்பகுதியின் வரலாறு-பண்பாட்டுச் சிறப்பினை அறிய இயலும்.

கருவூர் அகழாய்வில் கருவூர் - 6 (KRR-6) என்ற குழியில் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் காலப்பகுப்பு கணக்கிடப்பட்டது. கருவூரில் மொத்தம் ஒன்பது அகழாய்வுக் குழிகள் இடப்பட்டன. அவற்றில் காணப்பட்ட பாள நிலைகளின் அடிப்படையில் மற்றும் அதில் கிடைத்த பலவகையான பானை ஓடுகள், தொல்பொருட்களின் அடிப்படையில் நான்கு பண்பாட்டுக் காலங்கள் அறியப்பட்டன.

| | |
|---|---|
| **நான்காவது பண்பாட்டுக் காலம்**<br>கி.பி. 4 முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை(Period - IV) | சொரசொரப்பான தடிமான சிவப்பு நிற பானைஓடுகள்(Coarse Red Ware) |
| **மூன்றாவது பண்பாட்டுக்காலம்**<br>கி.பி. 3 முதல் கி.பி. 4-ஆம்<br>நூற்றாண்டு (Period - III) | செம்பூச்சு பூசப்பெற்ற பானை ஓடுகள் (ஆந்திர பானை ஓடுகள்)<br>(Russet Coated Ware) |
| **இரண்டாவது பண்பாட்டுக்காலம்**<br>கி.பி. 1 முதல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு (Period - II) | பாய் போன்ற வேலைப்பாடு செய்யப் பட்ட பானை ஓடுகள், தமிழ் எழுத்து பொறிக்கப்பட்டவை, ஆம்பொரா, ரௌலடட் ரோமானிய பானை ஓடுகள் செம்பூச்சுபானை ஓடுகள், கறுப்பு-சிவப்பு பானை ஓடுகள் |
| **முதல் பண்பாட்டுக்காலம்**<br>கி.மு.2 முதல் கி.மு.1-ஆம் நூற்றாண்டு (Period - I) | சிவப்பு நிற பானை ஓடுகள்<br>கறுப்பு சிவப்பு பானை ஓடுகள் |

**காலம் - 1**

**கிறிஸ்துவுக்கு முந்தைய கால பண்பாடு** சிவப்பு நிற பானை ஓடுகள், மெல்லியதான கறுப்பு சிவப்பு நிற பானை ஓடுகள் கிடைத்தன.

**காலம் - 2**

**முந்தைய வரலாற்றுக் காலத்தைச் சார்ந்ததாகும்.** இதில் கறுப்பு சிவப்பு நிற பானை ஓடுகள், செம்பழுப்பு பூச்சு பெற்ற பானை ஓடுகள், ரோமானிய நாட்டுத் தொடர்பை எடுத்துக் கூறும் ஆம்பொரா, ரௌலடட், பாய் வேலைப் பாடுகளுடன் பானை ஓடுகள் மேலும் புகளூர் கல்வெட்டு எழுத்து அமைதியுடன் பொறிக்கப்பட்டுள்ள பானை ஓடுகளும் இக்கால பண்பாட்டில் கிடைத்துள்ளன.

**காலம் - 3**


**முந்தைய வரலாற்றுக் கால பண்பாட்டில் இரண்டாவது நிலையைக் காண முடிகிறது.** இப்பண்பாட்டுக் காலத்தில் கறுப்பு சிவப்பு நிற பானை ஓடுகள், செம்பூச்சு பூசப் பெற்ற பானை ஓடுகள், பாய் வேலைப்பாடு கொண்ட பானை ஓடுகள், ரோமானிய ஆம்பொரா பானை ஓடுகள் தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளுடன் ஆந்திர பானை ஓடுகள் அதிக அளவில் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**காலம் - 4**


**கரூவூரின் மத்திய கால வரலாற்றை** எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளது. இக்கால பண்பாட்டில் அதிக அளவில் சொரசொரப்பான தடிமனான சிவப்பு நிற பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

# புகளூர் கல்வெட்டுகள்

1



1. முதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
2. கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
3. பெருங்கடுங்கோன் மகன் ளங்
4. கடுங்கோ ளங்கோ ஆக அறுத்த கல்




1. மூதாமண்ணன் யாற்று செங்காயபன் உறைய்
2. கோ ஆ . . . ல்லிரும்புறை மகன் பெருங்
3. கடுங்கோன் மகன் கடுங்கோன் ளங்கடுங்
4. கோ ளங்கோ ஆக அறுபித கல்




. . . . அதி
ட்டான்னம்


1. யாற்றூர் செங்காயபன்
2. தாவன் ஊர்ப் பின் அன் குற்றன்
3. ன் அறுபித்த அதிட்டானம்




1. நலி[ய்] ஊர் ஆ பிடன் குறும்மகள்
2. கீரன் கொறி செயிபித பளி




நல்லி[ய்]ஊர் ஆ பிடந்தை மகள் கீரன் கொற்றி அதிடானம்



1. கொற்றந்தை ளவன்
2. முன்று




ணாகன் மகன் பெருங்கீரன்




1. கருஊர் பொன் வாணிகன்
2. நத்தி அதிட்டானம்


1. . . .
2. பெ . . .
3. கன் . . .
4. மக . . .
5. ளவா . . .



. . . அதிட்டானம்




1. எண்ணை வாண்ணிக
2. ன் வெநி ஆதன் அதிட்டானம்



**பனைதுறை வெஸன் அதட் அனம்**

அய்யாமலை கல்வெட்டு



சிங்கிரமலை- சிமணக்குகை கல்வெட்டு

# அகழாய்வுக் குழிகள்

| அகழாய்வுக் குழிகள் | இடம் | ஆண்டு |
| --- | --- | --- |
| 1. கருவூர் - KRR -1 | ஜெயபிரகாஷ் துவக்கப்பள்ளி | 1973-74 |
| 2. கருவூர் - KRR -2 | ஜெயபிரகாஷ் துவக்கப்பள்ளி | 1973-74 |
| 3. கருவூர் - KRR -3 | சி.எஸ்.ஐ. பள்ளி மைதானம் | 1977 |
| 4. கருவூர் - KRR -4 | துணை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் | 1977 |
| 5. கருவூர் - KRR -5 | ஆடவர் உயர்நிலைப் பள்ளி விடுதி வளாகம் | 1979 |
| 6. கருவூர் - KRR -6 | மகளிர் உயர்நிலைப் பள்ளி வளாகம் | 1979 |
| 7. கருவூர் - KRR -7(1) | தொழிற்பயிற்சி பள்ளி வளாகம் | 1996 |
| 8. கருவூர் - KRR -8(2) | அமராவதி ஆற்றங்கரை | 1996 |
| 9. கருவூர் - KRR -9(3) | மாரியம்மன் கோயில் ஜெயபிரகாஷ் துவக்கப்பள்ளி இடையில் உள்ள காலி இடம் | 1996 |


**கருவூர் - KRR -1 (1973-74)** - இவ்வகழ்வு குழியானது ஜெயபிரகாஷ் துவக்கப்பள்ளி வளாகத்தில் இடப்பட்டது. அகழ்வுகுழியின் அளவு 4×4 மீட்டர் ஆகும். பொதுவாக இக்குழியில் மண் கடினமில்லாமலும், செங்கற்துண்டுகள், வளையல் துண்டுகள் மற்ற தொல்பொருட்களும் கிடைத்தன. 70 செ.மீ ஆழத்தில் இரண்டு செப்புக் காசுகள் கிடைத்தன. ஒன்று ஆங்கிலேயர் காலத்தது. மற்றொன்று காசு என்னவென்று அறிய இயலவில்லை மீண்டும் 1.15 மீட்டர் ஆழத்தில் ஆங்கிலேயர் கால 1/2 அரை காசு கிடைத்தது 1.95 ஆழத்தில் அதிக அளவில் உடைந்த செங்கற்கள் கிடைத்தன. அகழ்வுகுழி முழுவதும் இவ்வாறே கிடைத்ததால் முன்பு இங்கு ஏதேனும் ஒரு கட்டடப்பகுதி இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது. 1.90 மீட்டர் ஆழத்தில் 3-4 என்ற இரு மர முளைகளுக்கு கிடையே கரித்துண்டுகள் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்டது. இப்பகுதி 2.20 மீட்டர் ஆழம் வரை செல்லப்பட்டது. 1-2 என்ற மர முளைகளுக்கு இடையே 2.90 மீட்டர் ஆழம் வரை சென்ற போது சுட்ட செங்கற்களால் இரு வரிசை உடைய கட்டடப்பகுதி தென்பட்டது. இக்கட்டடம் கட்டப்பட்ட முறை சிறப்பானது. வெள்ளைப் பளிங்குக் கற்கள், உடைந்த பானை ஓடுகள், உடைந்த செங்கற்கள் அடங்கிய கடினமான தரையின் மீது செங்கற்கள் பாவப்பட்டிருந்தன. இதன் நீளம் 4.35 மீட்டர் செ.மீ. ஆகும். செங்கற்களுக்கு இடையே களிமண் பூச்சு காணப்பட்டது. இக்கட்டடப்பகுதி குழியின் வடக்குப் பாள நிலை (Section) பகுதியில் காணப்பட்டது. செங்கல்லின் அளவு 47 செ.மீ. X 32 செ.மீ. X 9 செ.மீ. ஆகும்.

இக்குழியில் 3.18 மீட்டர் ஆழத்தில் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடு 3-4 என்ற மர முளைகளுக்கு இடையே கிடைத்த கறுப்பு சிவப்பு பானை ஓட்டில் "இ-த" என்ற இரண்டு எழுத்துக்கள் காணப்பட்டன 3.95 மீட்டர் ஆழத்தில் குறியீடு பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்தன. 3.85 முதல் 4.20 மீட்டர் ஆழம் வரை ஆற்று மணல் தென்பட்டது இவ்வகழ்வு குழியானது 4.50 மீட்டர் ஆழம் வரை செல்லப்பட்டது.

<u>கருவூர் - 2 KRR -2 (1973-74)</u> - இவ்வகழ்வு குழியானது கருவூர் KRR - 1 என்ற முதற் குழியில் காணப்பட்ட கட்டடப்பகுதியின் அமைப்பினை அறிந்து கொள்ள ஏதுவாக தொடர்ச்சியாக அமைக்கப்பட்டது. கட்டடத்தின் அருகில் 2.40 மீட்டர் ஆழத்தில் கிழக்கு-மேற்காக சென்ற கால்வாய் கண்டுபிடிக்கப்பட்டது. கால்வாயின் இருபுறமும் செங்குத்தாக வைக்கப்பட்ட செங்கற்கள் காணப்பட்டன. கால்வாயின் அகலம் 40 செ.மீ. கால்வாயின் உள்பகுதி வெள்ளைப் பளிங்குக் கற்களின் சிறு துகள்களுடன் சுண்ணாம்பினால் பூசப்பட்டு காணப்படுகிறது. இக்கால்வாய் 2.45 மீட்டர் நீளம் உள்ளதாக விளங்குகிறது. செங்கற் கட்டடமும், அதனருகே காணப்பட்ட கால்வாயும் சங்க காலத்தில் நன்கு திட்டமிடப்பட்ட வீட்டின் அமைப்பை அறிந்து கொள்ள உதவுகிறது. கருவூர் 1-2 என்ற இரண்டு குழிகளிலும் மூன்று அடுக்கு கட்டடப்பகுதிகள் இருந்தது அறியப்பட்டது.

<u>கருவூர் - 3 KRR -3 (1977)</u> - கருவூர் - புகளூர் சாலையில் சி.எஸ்.ஐ. விளையாட்டு மைதானத்தில் கருவூர் -3 என்ற குழி இடப்பட்டது இதன் அளவு 4×4 மீட்டர் ஆகும். இக்குழியில் மண் தோண்டுவதற்கு எளிமையாக இருந்தது. 52 செ.மீ. ஆழத்தில் அதிகமான மண் அரிப்புடன் ஒரு காசு கிடைத்தது. வேதியல் முறைப்படி காசு சுத்தம் செய்யப்பட்டது. அது ரோமானிய வெள்ளி காசு என அறியப்பட்டது அதிகமான தேய்மானம் காணப்பட்டதால் எந்த அரசர் காலத்தது என்பதை அறிய இயலவில்லை கறுப்பு-சிவப்பு பானை ஓடுகள் 70 செ.மீ. முதல் 90 செ.மீ. ஆழத்தில் கிடைத்தன. 1 மீட்டர் ஆழத்தில் II -0 என்ற மரமுளைகளுக்கு இடையே மண் கடினமாகவும் சிவப்பு நிறமாகவும் காணப்பட்டது. III-IV என்ற மறு முளைகளுக்கு இடையே 1.08 மீட்டர் ஆழத்தில் ஆற்று மணல் தென்பட்டது. சிவப்பு நிற பானை ஓடுகள் கறுப்பு நிற பானை ஓடுகள், கறுப்பு சிவப்பு நிற பானை ஓடுகள் இந்த ஆழ அளவில் கிடைத்தன தொடர்ந்து 0 -IV என்ற மரக்குச்சிகளுக்கு இடையே அகழ்வு மேற் கொண்ட பொழுது மணல் கடினமாகவும் சிவப்பு நிறம் உடையதாகவும் சரளை கற்களும் கூழாங்கற்களும் கிடைத்தன. பானை ஓடுகள் மிகவும் குறைந்து விட்டன. 1.51 மீட்டர் ஆழத்தில் இயற்கை மணல் ஆன செம்புரான் கல்லின் (Laterite)அமைப்பு தென்பட்டது.

<u>கருவூர் - 4 KRR -4 (1977)</u> - கருவூர் துணை ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள காலி இடத்தில் அகழ்வுக்குழி இடப்பட்டது. இந்த இடமானது கருவூர் சிவன் கோயிலின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. மற்ற சுற்றுப்புற இடங்களைக் காட்டிலும் இந்த இடம் மிக உயர்ந்த மண்மேடாக அமைந்துள்ளது. அகழ்வு மேற்கொள்ளும் பொழுது இந்த இடம் சற்று கலைந்துள்ளது (disturbed) என்பதை அறிய முடிந்தது. ஏனெனில் மேற்பகுதியிலேயே கறுப்பு சிவப்பு பானை ஓடுகள்




CULTURAL SEQUENCE OF KARUR (KRR-6)

கிடைத்தன. 1.03 மீட்டர் ஆழத்தில் O-1 என்ற மரமுளைகளுக்கு இடையே சில செங்கற்துண்டுகள் காணப்பட்டன தொடர்ந்து அதிக அளவில் தொல் பொருட்கள் கிடைக்கவில்லை. 3 மீட்டர் ஆழத்தில் (O-IV) என்ற மரமுளைகளுக்கு இடையே கற்கள் தொடர்ச்சி காணப்பட்டது. ஒழுங்கற்ற கற்களால் அமைக்கப்ட்ட இக்கட்டட அமைப்பு கோயிலைச் சுற்றி இருந்த அகழியின் மதிற்சுவர் ஆக இருக்க வேண்டும் என அறியப்பட்டது. இக்கட்டிட அமைப்பின் தொடர்ச்சியினை அறிய அகழ்வுக் குழியானது கிழக்கு, தெற்கு, வடக்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக அகழப்பட்டது. அகழ்வு குழியில் காணப்பட்ட கற்களின் அமைப்பு தொடர்ச்சியாக அமைந்துள்ளதை அறியப்பட்டது.

**கருவூர் - 5 KRR - 5 (1979)** - அரசு மாணவர் உயர்நிலைப்பள்ளி தங்கும் விடுதி வளாகத்தில் இக்குழி அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது இங்கு மண் தோண்டுவதற்கு எளிமையாக இருந்தாலும் சிறப்பான தொல் பொருட்களும் பானை ஓடுகளும் கிடைத்தன 1.70 மீட்டர் ஆழத்தில் (O-II) என்ற மர முளைகளுக்கு இடையில் மேற்கு பகுதியில் சில செங்கற்கள் காணப்பட்டன. எனவே அதனை அப்படியே விட்டு விட்டு கட்டடப்பகுதி இதன் தொடர்ச்சியாக தெரிகிறதா என்பதை பார்க்க மற்ற பகுதியில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. 1.86 மீட்டர் ஆழத்தில் களிமண்ணால் ஆன மண் அடுக்கு தெரிவந்தது. 15 செ.மீ. கனமுள்ள இப்படிவத்தில் செம்பூச்சு பூசப்பெற்ற பானை ஓடுகள் ஆந்திர பானை ஓடுகள் (Russet Coated Ware) கறுப்பு சிவப்பு பானை ஓடுகள் கிடைத்தன. இம்மண் அடுக்கு அடியில் 35 செ.மீ. கனமுள்ளதான வெண்கற்கள் படிவம் காணப்பட்டது. இதுவே ஒரு கட்டடத்தின் அடித்தளமாக பயன்பட்டிருக்க வேண்டும் எனக் கருத முடிகிறது. இக்குழியில் காணப்பட்ட கட்டடப்பகுதியின் தொடர்ச்சியினை அறிய வடக்கு பக்கம் தொடர்ந்து குழி அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் 55 செ.மீ. ஆழத்தில் வெள்ளைக் களிமண்ணால் ஆன (Kaolin) மூன்று பானை ஓடுகள் கிடைத்தன. இவைகள் முக்கியமான வரலாற்றுச் சிறப்புமிக்க பானை ஓடுகளாகும். இவை கி.பி. 4,5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். வடஇந்திய தொடர்பினை அறிய இவை முக்கியமான சான்றாக விளங்குகிறது. இயற்கை மண் இக்குழியில் 2.45 மீ. ஆழத்தில் காணப்பட்டது.

**கருவூர் - 6 KRR - 6 (1979)** - கருவூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் KRR - 6 என்ற குழி அகழப்பட்டது. போதுமான இடம் கிடைக்காததால் 3×2 மீட்டர் அளவுள்ள குழியே அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. 1 மீட்டர் ஆழத்தில் பழைய செங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. பிற்கால கட்டடப் பகுதி தென்பட்டது. 1.75 ஆழத்தில் எழுத்துப் பொறிப்பு உள்ள பானை ஓடுகள் கிடைத்தன. 1.90 மீட்டர் ஆழத்தில் ரோமானிய நாட்டு தொடர்புக்கு அடையாளமாக ஆம்பொரா பானை துண்டுகள் கிடைத்தன. 2.38 மீட்டர் ஆழத்தில் ரௌலடட் வகை பானை ஓடுகள் கிடைத்தன. இவ்வகழ்வு குழி மிகவும் முக்கியமானது. ஏனெனில் இங்கு எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், ஆம்பொரா, ரௌலடட் பானை ஓடுகள், குறியீடுகள் உள்ள பானை ஓடுகள், பாய்வேலைப்பாடுகள் பானை ஓடுகள், ஆந்திர ஓடுகள், மெலிதான கறுப்பு சிவப்பு பானை ஓடுகள் போன்ற

முக்கியமாக சான்றுகள் கிடைத்தன. இச்சான்றுகளைக் கொண்டே கருவூரின் கால பகுப்பும் பண்பாடும் அறுதியிட்டுக் கூறப்பட்டது.

**கருவூர் - 7 KRR - 7 (1996)(1)** - 5×4 மீட்டர் அளவில் தொழிற்நுட்ப பயிற்சி பள்ளி விடுதி வளாகத்தில் இடப்பட்டது. இக்குழியில் 4 பாள நிலைகள் காணப்பட்டன இரண்டாவது பாள நிலை வரை மண்அடுக்குகள் கலைந்துள்ளது. மேற்கு பக்கத்தில் ஒரு குழி தோண்டப்பட்ட 70 செ.மீ. அகலமுள்ளது 3.30 செ.மீ. ஆழமுள்ளதும் குழி தோண்டப்பட்டதற்கான சான்று காணப்பட்டது. இக்குழியில் கறுப்பு சிவப்பு பானை ஓடுகள், சிவப்பு நிறமான ஓடுகள் சங்க கால ஓடுகள், விலங்குகளின் எலும்பு, குறியீடு மற்றும் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்தன. இக்குழியில் இயற்கை மண் சிவப்பு நிறமாகவும், செம்பூராங்கல் 2.85 மீட்டர் ஆழத்திலும் காணப்பட்டுள்ளது.

இக்குழியில் செவ்வக வடிவமான கட்டட அமைப்பு 117 (மேற்கு 117 செ.மீ.) (வடக்கு 143 செ.மீ.) தெற்கு 143 செ.மீ. அளவுள்ளது 1.25 மீட்டர் ஆழத்தில் காணப்பட்டது. இது முதல் மண்அடுக்கில் 2-வது பாள நிலை வரை செல்கிறது. 9 வரிசை செங்கற்கள் காணப்பட்டன. இக்கட்டட அமைப்பின் மேற்புறம் சங்க கால ஓடுகள், பானை ஓடுகள், எலும்புகள் கிடைத்தன. இதனைக் கொண்டு இக்கட்டட அமைப்பு தண்ணீர் சேகரிக்கப்படும் தொட்டி அல்லது சாயத் தொட்டியாகப் பயன்பட்டிருக்க வேண்டும். கருவூர் நெசவுத் தொழிலுக்கு மிகச்சிறப்பான இடம் பெற்று விளங்குகிறது. மேற்கண்ட கட்டட பகுதி சாயத் தொட்டியாக இருந்திருக்க வேண்டும் என்பதை ஊகிக்க முடிகிறது.

**கருவூர் - 8 KRR - 8 (1996) (2)** - கருவூர் நகரின் அருகிலேயே பாயும் ஆறு அமராவதி என அழைக்கப்படுகிறது. இலக்கியங்கள் ஆன்பொருநை எனக் குறிப்பிட்டுள்ளது. சமீபகாலமாக ஆற்றிலும், ஆற்றின் கரைகளிலும் சங்ககால சேரர், பாண்டியர் காசுகள், பிற்கால அரசர்களின் காசுகள், சங்க கால தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட மோதிரங்கள், அழகிய வேலைப்பாடுமிக்க அணிகலன்கள் போன்றவை மக்களால் சேகரிக்கப்பட்டது. எனவே கருவூரின் அமராவதி ஆற்றின் கரையில் இருந்த தோட்டத்தில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் முக்கியமான தொல்பொருட்கள் ஏதும் கிடைக்கவில்லை.

**கருவூர் - 9 KRR - 9 (1996) (3)** - கருவூர் மாரியம்மன் கோயிலுக்கும் ஜெயபிரகாஷ் பள்ளிக்கும் இடையில் உள்ள காலி இடத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது இதில் 1.65 மீட்டர் ஆழத்தில் ($O-V-O^1-V^1$) என்ற மரமுளைகளுக்கு இடையில் ஒரு வீட்டின் தரைதளப் பகுதி காணப்படுகிறது. தரையமைப்பு செங்கற்துண்டுகளால் அமைக்கப் பட்டதாகும். இங்கு சங்க கால ஓடுகள், எலும்புகள், குறியீடு மற்று எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

# மட்பாண்டங்கள் (Pottery)
## எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடுகள்

கருவூர் அகழாய்வின் வரலாற்றுச் சிறப்புமிக்க பானை ஓடுகள் கிடைத்துள்ளன. ரோமானிய தொடர்புக்கு ஆம்பொரா, ரௌலடட் பானை ஓடுகளும் வடமேற்கு இந்தியப் பகுதிகளின் தொடர்புக்கு ஆதாரமாக வெள்ளை நிற (Kaolin) பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. மேலும் ஆந்திர பானை ஓடுகள், சிவப்பு நிற பானை ஓடுகள், செம்பூச்சு பூசப் பெற்ற பானை ஓடுகள், கறுப்பு சிவப்பு பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

### ஆம்பொரா

கருவூர் அகழாய்வின் காலம் II-III இவைகளில் ஆம்பொரா துண்டுகள் கிடைத்தன. இவற்றுள் கைப்பிடிகள், கழுத்து விளிம்புப் பகுதி, அடிப்பகுதி போன்றவை வெளிநாட்டிலிருந்து வந்தவையாகும். இவ்வகை மட்பாண்டங்கள் வெளிநாட்டிலிருந்து மது அல்லது ஆலீவ் எண்ணை கொண்டு வரப் பயன்பட்டிருக்க வேண்டும். கரூவூர்-6 அகழ்வுக் குழியில் 4.60 மீட்டர் (7-ஆவது பாள நிலை) ஆம்பொரா துண்டில் கறுப்பு நிற பொருள் ஒட்டிக் கொண்டிருந்து. இதனை துறை வேதியியல் பிரிவு ஆய்வு செய்ததில் ஆலீவ் எண்ணை என்பது உறுதி செய்யப்பட்டது. கி.பி.1-ஆம் நூற்றாண்டில் ரோமானிய நாட்டுடன் கொண்டிருந்த தொடர்புக்கு சான்றாக ஆம்பொரா துண்டுகள் அமைந்துள்ளன.

### அரிட்டைன் பானை ஓடுகள்

கருவூர்-4 என்ற அகழாய்வுக் குழிக்கு அருகே மேற்பரப்பு ஆய்வின் போது 3 பானை ஓட்டு துண்டுகள் கிடைத்தன. இவை சிவப்பு நிற பூச்சு பூசப்பட்டவையாகும். இது முத்திரை குத்தப்பெற்ற வகையைச் **(terra sigillata)** சார்ந்ததாகும். இவை கிழக்கு மத்தியதரைக் கடல் பகுதியைச் சேர்ந்த பானை வகை ஆகும். இதன் காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

### ரௌலட்டட் பானை ஓடுகள்

கருவூர் அகழாய்வில் 2 மற்றும் 3 காலப்பகுப்பில் ரௌலட்டட் பானை ஓடுகள் கிடைத்துள்ளன. சில அப்பானை ஓடுகள் போன்றே நகலாக செய்யப்பட்டவை. இவ்வகை பானை ஓடுகள் பழுப்பு நிறக் களி மண்ணால் செய்யப்பட்டவையாகும். இவை நடுவில் தட்டையாக இருக்கும். தட்டைப்பகுதியில் புள்ளிகள், முக்கோண வடிவ புள்ளிகளுடன் வேலைப்பாடு காணப்படும். அறிஞர்கள் மார்டிமர் வீலர், கசால் போன்றவர்கள் இவை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி ஆனவை எனக் கருதினர். ஆனால் விமலா பேக்லி என்ற அறிஞர் ரௌலடட் பானை ஓடுகள் உள்நாட்டைச் சேர்ந்தவை என்றும், தொழில் நுட்பம் மத்திய தரை நாடுகளிலிருந்து வந்தவை எனவும் கருதுகிறார்.

## வெள்ளை நிற பானை ஓடுகள் (Kaolin Pottery)

மூன்று வெள்ளை நிற பானை ஓடுகள் KRR-5 என்ற குழியிலிருந்து சேகரிக்கப்பட்டது. இது கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இத்தகைய பானை ஓடுகள் கரூவூர் அகழாய்வில் மட்டுமே கிடைத்தன. தமிழக அகழாய்வுகளில் இதுவரை எங்கும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற பானை ஓடுகள் அம்பாரி, தேஷ்பூர், பிஷ்மக் நகர் போன்ற வடமாநில அகழாய்வில் கிடைத்துள்ளன. இது போன்று சிறிய பானைகள் சங்கு கழுத்துடைய பானை வடிவத்திலும், கிரேக்க பாத்திரம் போன்ற வடிவத்திலும் கருவூர் அகழாய்வில் கிடைத்தன. கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டில் வடமேற்கு பகுதியுடன் கொண்டிருந்த தொடர்புக்கு சான்றாக இப்பானை ஓடுகள் விளங்குகின்றன.

## கறுப்பு சிவப்பு பானை ஓடுகள்

கருவூர் அகழாய்வில் பெரும்பான்மையான பானை ஓடுகள் இவையேயாகும் வெளிப்பகுதி மிகுந்த பளபளப்புடன் காணப்படுகிறது. சூளையில் வைத்து சுடும்போது உட்பகுதி கருப்பாகவும், வெளிப்பகுதி சிவப்பாகவும் உள்ளது. இதில் பானைகள் தட்டுகள், சிறிய பானைகள் அடங்கும்.

## செம்பூச்சு பூசப்பெற்ற பானை (Red Slipped ware)

இவ்வகையிலான பானை ஓடுகள் அதிகமாக கிடைத்துள்ளன. செம்பூச்சு வெளிப்பகுதியில் பூசப்பட்டுள்ளது. சிலவற்றில் உட்பகுதியினுள்ளும் காணப்படுகிறது சிறு குழிவான பானைகளும், தட்டுகளும் இதில் அதிக வடிவமைப்புடன் காணப்படுகிறது.

## ஆந்திர பானை ஓடுகள் (Russet coated ware)

மூன்றாவது காலப் பகுப்பில் இத்தகைய பானை ஓடுகள் அதிக அளவில் கிடைக்கின்றன. சில ஓடுகளில் வெள்ளை நிற கோடுகள் தீட்டப்பட்டுள்ளது. இவை அலைவடிவத்துடன் குறுக்கு கோடுகளாகவும், கோணல் கோடுகளாகவும் காணப்படுகிறது. இவை பெரும்பாலும் சிறு மட்கலங்களாக காணப்படுகிறது.

## பாய் வேலைப்பாடு பானை ஓடுகள் (Mat designed Pottery)

கருவூர் அகழாய்வில் 2 & 3 காலப் பகுப்பில் சற்று சிகப்பு வண்ணம் குறைந்த இத்தகைய பானை ஓடுகள் கிடைத்தன. இவை குறுக்கு நெடுக்காக பாய் போன்று வேலைப்பாடுடன் காணப்படுவதால் இத்தகைய பெயரிட்டு அழைக்கப்பட்டது. இத்தகைய பானை ஓடுகள் அரிக்கமேடு அகழாய்வில் அரிட்டைன் காலத்திற்கு முந்தைய நிலையில் கி.மு. 1 - கி.பி. 1-ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்தவையாக விளங்குகிறது. இராமநாதபுரம் மாவட்டம் அழகன் குளம் அகழாய்விலும் 2 மற்றும் 3 காலப் பகுப்பில் கி.மு. 300 - கி.பி. 500 என்ற கால கணக்கீட்டிலும் இத்தகைய பானை ஓடுகள் கிடைக்கின்றன.

## சொரசொரப்பான சிவப்பு நிற பானை ஓடுகள்

கருவூர் அகழாய்வில் அதிக அளவில் இவை கிடைத்துள்ளன. சற்று வண்ணம் குறைந்து தடிப்பானதும், மணல்-களிமண்ணுடன் அதிக அளவில் செய்யப்பட்டதாகவும் விளங்குகிறது. இவை தானியம், தண்ணீர் சேகரிக்க உதவும் பானைகளாகவும், சிறிய பாத்திரங்களாக விளங்கும் வடிவம் உடையதாகும்.

**அகழ்வுக்குழி: KRR-6**

**இடம்: அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி - கரூவூர்**

கரூவூர் அகழாய்வில் பண்பாட்டுத் தொடர்ச்சி மற்றும் கால வரையறை

| மட்கல வகைகள் | ஆழம் | அகலம் | பாளநிலை | காலம் |
|---|---|---|---|---|
| கறுப்பு சிவப்புமட்கலன் சிவப்பு மட்கலன் | 5.65 செ.மீ. | 60 செ.மீ. | 9 | காலம் - 1 (கி.மு. 2 முதல் கி.பி. 1 வரை) |
| கறுப்பு சிவப்பு மட்கலன் சிவப்பு மட்கலன் ஆம்பொரா ரௌலட்டட் ஓடுகள், பாய் அலங்கார ஓடுகள், எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் | 5.00 மீ. முதல் 3.15 மீ. வரை | 1.90 செ.மீ. | 8 7 6 5 | காலம் - 2 (கி.பி. 1 முதல் கி.பி. 3 வரை) |
| காவிக் கலவை பூசிய மட்கலன்கள் (இத்துடன் மேற்கூறிய ஓடுகளும் கிடைக்கின்றன | 2.95 மீ. முதல் 2.50 மீ. வரை | 45 செ.மீ. | 4 | |
| கறுப்பு சிவப்பு மட்கலன்கள் ரௌலட்டட் சொரசொரப்பான சிவப்பு மட்கலன்கள் | 2.50 மீ. முதல் 50 செ.மீ வரை | 2 மீ. மூன்றும் சிதைந் துள்ளன | 3 2 1 | காலம் - 3 (கி.பி.3 முதல் கி.பி.4 வரை) |
| மேல் மண் (Humus) | 2.50 மீ. முதல் 50 செ.மீ. வரை | 50 செ. மீ. வரை | H | காலம் - 4 (கி.பி.4 முதல் கி.பி.14 வரை) |

## எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடுகள்

தமிழ்நாட்டு அகழாய்வுகளில் தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் உறையூர், அழகரை, வல்லம், அழகன்குளம், தேரிருவேலி, கொடுமணல், மாளிகைமேடு, காஞ்சிபுரம் போன்ற இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. கருவூர் அகழாய்விலும் எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

**சாதன்**

கருவூர் அகழாய்வுக் குழி - 6-இல் சிகப்பு நிற பானை ஓட்டில் பொறிக்கப்பட்டு கிடைத்துள்ளது. இதன் எழுத்து அமைதி புகளூர் கல்வெட்டு போன்றே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**ல**

கருவூர் - 1 அகழாய்வுக் குழியில் 'ல' என்ற எழுத்து கறுப்பு சிவப்பு பானை ஓட்டில் 3.85 மீட்டர் ஆழத்தில் ஓட்டில் கிடைத்துள்ளது.

**கடியதா**

கருவூர் - 7 என்ற அகழாய்வுக் குழியில் சங்க கால சான்றுகளான கறுப்பு சிவப்பு நிற பானை ஓடுகளுடன் கிடைத்துள்ளது. இது முதுமக்கட்தாழி போன்ற பெரிய பானையின் கழுத்துப் பகுதியில் வெளிப்புறத்தில் காணப்படும் எழுத்துக்கள் போல அமைந்துள்ளது. நான்கு எழுத்துக்கள் முழுமையாகக் காணப்படுகிறது. இப்பானை ஓடு 3.30 மீட்டர் ஆழத்தில் கிடைத்தது.

**ழ் யதிய அயம ரைய அயபா**

கருவூர் - 7 என்ற குழியில் 1.05 மீட்டர் ஆழத்தில் கறுப்பு சிவப்பு நிற பானை ஓட்டில் காணப்படுகிறது. இதில் 12 எழுத்துக்கள் காணப்படுவது சிறப்பாகும். 1996--ஆம் ஆண்டில் நடைபெற்ற அகழாய்வில் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் மொத்தம் ஏழு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

**'குறகல்'**

1977-ஆம் ஆண்டில் கருவூர் துணை ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அகழாய்வின் போது நடத்தப் பெற்ற மேற்பரப்பு ஆய்வில் போது எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டன. அதில் ஒன்றில் 'குறகல்' என்று சிவப்பு நிற பானை ஓட்டில் பொறிக்கப்பட்டுள்ளது இது போன்ற வாசகம் உடைய பானை ஓடுகள் கொடுமணல் அகழாய்விலும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது குறு அகல் எனக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

# தொல்பொருட்கள்
## காசுகள், முத்திரைகள், மோதிரங்கள், மணிகள்

கருவூர் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊராக இருப்பதால் நகரிலும் மற்றும் நகரின் அருகே ஓடும் அமராவதி ஆற்றிலும் சங்க காலத்திலிருந்து அண்மைக்காலம் வரையிலான பலகாசுகள் கிடைக்கின்றன. அமராவதி ஆற்றில் காசுகள் மட்டுமல்லாமல் செப்பு மோதிரங்கள், பண்டைத்தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட மோதிரங்கள், முத்திரைகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. இவை கருவூரின் தொன்மைச் சிறப்புக்கு மேலும் சான்றாக விளங்குகின்றன எனலாம்.

முத்திரைகாசு (கி.மு. 5 முதல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) சங்க கால சதுர வடிவிலான சேரர் காசுகள், பல்லவர் காசுகள், ரோமானிய காசுகள் போன்ற பல காசுகள் கிடைத்துள்ளன. கருவூர் வரலாற்றுக்கு பெரிதும் உதவும் 'கொல்லிப்பொறை காசு', 'கொல்லிரும்பொறை காசு', 'மாக்கோதை காசு' போன்ற காசுகள் குறிப்பிடத் தக்கவையாகும்.

சங்க காலத்தைச் சேர்ந்த வெள்ளி முத்திரையும் இங்கு கிடைத்துள்ளது. இதில் மங்கலச்சின்னங்ளோடு குறவன் என்ற பண்டைத் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

கவூர் அமராவதி ஆற்றங்கரையில் சங்ககாலத்தைச் சேர்ந்த மோதிரங்களும் கிடைத்துள்ளன. இவை வெள்ளி, தங்கம் ஆகிய உலோகங்களால் செய்யப்பட்டவையாகும். இதன் முகப்பில் பண்டைத் தமிழ் எழுத்துக்களில் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதில் 'ஊபா ஆன்' 'தித்தன்' 'பேர்அவதான்' 'தாயன் ஓதலன்' போன்ற பெயர்கள் காணப்படுவது சிறப்பாகும்.

கருவூர் அமராவதி ஆற்றுப்படுக்கையில் கிடைத்த பொன்னால் ஆன இலச்சினை மோதிரம் மிகவும் சிறப்பானது. இதன் முகப்பில் ஒரு குழிவான நீள்வட்டம் அமைக்கப்பட்டுள்ளது அதனுள் ஒரு தலைவனும் தலைவியும் இணைந்து நிற்கும் கோலம் இலச்சினையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இது சங்க காலத்தைச் சேர்ந்தது என்றும், சுமார் கி.பி. முதல் நூற்றாண்டில் செய்யப்பட்டது என்றும் கூறலாம். சங்க கால சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாகக் கிடைத்துள்ள முதல் புறச்சான்று என்ற தனிச்சிறப்பினை இச்சிற்ப மோதிரம் பெறுகிறது.

**மணிகள்**

கருவூர் அகழாய்வில் கிடைத்த மணிகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாக 150-க்கும் மேற்பட்ட சுடுமண், கண்ணாடி, வண்ணக்கற்கள், செம்பு, மாக்கல், போன்றவைகளால் செய்யப்பட்ட மணிகள் கிடைத்துள்ளன. சுடுமண்மணிகள் உருண்டை, ருத்ராட்சம் போன்றும் நீள் உருண்ட வடிவம் உடையதாகவும் காணப்பட்டுள்ளன.

# முடிவுரை

தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களில் கருவூரும் ஒன்று. கருவூர் பண்டை நாளில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக விளங்கியது. வடக்கில் கங்கை சமவெளியிலிருந்து வந்த தட்சிணபதம் (இன்றைய பெருவழி-7) கன்னியாகுமரி வரை சென்றது. இப்பெருவழியைப் பற்றி கௌடில்யர் குறிப்பிட்டுள்ளார். மேற்குக் கடற்கரையிலிருந்து பாலக்காட்டு கணவாய் வழியாக வந்த கொங்கப் பெருவழி கருவூர் உறையூர் ஆகிய ஊர்களைக் கடந்து பூம்புகார் வரை சென்றது. இவ்விரு பெருவழிகளும் கருவூரில் சந்தித்தன. அதனால் பல நாட்டு வணிகர்கள் இங்கு வந்து தங்கினர். இவ்வூரில் பண்டைய யவனக் காசுகள் (உரோமானியர், கிரேக்கர், பியூனிஷியர்கள் ஆகியோர்) காசுகள் வடநாட்டு முத்திரை காசுகள் சாதவாகனர் காசுகள் மற்றும் பல மன்னர்கள் வெளியிட்ட காசுகள் கிடைத்துள்ளன. இச்சான்றுகள் மூலம் அயல்நாட்டு வணிகர்கள் இங்கு வாணிகம் செய்தமையைக் காட்டுகின்றன. மேலும் சங்ககாலத்தைச் சேர்ந்த மோதிரங்கள், கொல்லிப்புறை, மாக்கோதை குட்டுவன்கோதை ஆகிய சேர மன்னர் காசுகளும் கிடைக்கின்றன. இரண்டு பெருவழிகள் சந்தித்த இடத்தில் கருவூர் வளங்கொழிக்கும் வாணிக நகரமாக திகழ்ந்துள்ளது. சங்ககாலத்தில் வேளிர்களின் தலைநகராக இருந்துள்ளது. கொங்கு வேளிர் தலைநகரமாக விளங்கியது. வேந்தர் படையெடுப்பில் வேந்தர் தலைநகரமாக எழுச்சி பெற்றது. மூவேந்தர்களில் சேர அரசர்களின் தலைநகரமாக நிலைபெற்றது. கொங்கு நாட்டு கனிம வளமும், பெருவழி வளமும் வேந்தர்களைக் கவர்ந்தது.

கருவூர் என்றே இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்படுகிறது. கருவூரில் நடைபெற்ற அகழாய்வு சங்ககால சேரர் தலைநகர் இதுவே என்பதை உறுதிப்படுத்துகிறது.

## கருவூர் அகழாய்வில் பங்கு கொண்டவர்கள்

கருவூர் அகழாய்வு 1973-74,1977, 1979, 1996 ஆண்டுகளில் நடைபெற்றது. முதல் அகழாய்வுப் பணி இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி அவர்களின் வழிகாட்டலின்படியும், இரண்டாவது 1996-ஆம் ஆண்டு பணி இயக்குநர் திரு. நடன. காசிநாதன் அவர்கள் வழிகாட்டலின்படியும் நடத்தப்பெற்றது.

## இவ்வாய்வுப் பணியில் பங்கு கொண்டவர்கள்

1. திரு. அ. அப்துல்மஜீத்
2. திரு. மா. சந்திரமூர்த்தி
3. திரு. கி. ஸ்ரீதரன்
4. திரு. து. துளசிராமன்
5. திரு. ச. செல்வராஜ்
6. திரு. கி. சு. சம்பத்
7. திரு. இரா.செல்வராஜ்
8. திரு. வே.வேதாசலம்
9. திரு. ச. கிருஷ்ணமூர்த்தி
10. திரு. எஸ். இராமசந்திரன்

**நிழற்படப் பிரிவு:**

1. திரு. இராமசந்திரன்
2. திரு. மு. த. ஸ்ரீதரன்

**பாதுகாப்புப் பிரிவு:**


நா. கிருஷ்ணமூர்த்தி

# Select Bibliography



1. A. Abdul Majeed - Manimangalam Terracottas P. 102, South Indian Studies 1978
2. Karashima Noboru - Ancient and Medieval Commercial Activities in Indian Ocean - Testimony of the Inscriptions and Ceramic Sherds, Taisho University, Tokyo - 2002
3. Natana. Kasinathan - Archaic Tamil Inscriptions from Excavations - Journal of the Epigraphical Society Vol. 23, 1997
4. Dr. R. Krishnamoorthy - Sangam Age Tamil Coins 1997
5. Dr. R. Krishnamoorthy - Non Romam Ancient Foreign Coins from Karur - South India 2000
6. Dr. R. Krishnamoorthy - Late Roman Copper Coins from South India, Karur - Madurai 1995
7. Dr. R. Krishnamoorthy - Sangam Period Chera Coins, JNSI 49, 1987
8. Dr. R. Krishnamoorthy - Silver Portrait Coin of Makkottai, Indian Coin Society, Nagpur 1990
9. Dr. R. Krishnamoorthy - Some New Finds of Sangam period Chera Coins JNSI 52, 1990, pp. 3-6
10. K. G. Krishnan - Chera Kings of the Pugalur Inscription, studies in South Indian History 1981
11. I. Mahadevan - Early Tamil Epigraphy from the Earliest Times to 6th Century A.D. Crea - Harvard University, Harvard - 2003
12. T.V. Mahalingam - Excavations in the Lower Kaveri Valley (Tirukampuliyur and Alagarai) University of Madras 1970
13. Dr. R. Nagaswamy - Roman Sites in Tamilnadu. MADHU Recent researches in Indian Archaeology and Art History
14. Dr. R. Nagaswamy - Roman Karur 1995
15. Dr. R. Nagaswamy - Karur - Vanchi The Capital of Sangam - Cheras
16. K.V. Raman - Excavations in Uraiyur - 1965 - 69 University of Madras 1988
17. K.V. Raman - Roman Coins from Tamilnadu, Studies in South Indian Coins Vol. II, pp. 19-34

18. K. Rajan - Archaeology of Tamilnadu 1994
19. K. Rajan - Kodumanal Excavations A Report 1996
20. K. Rajan - Archaeological Gazetteer of Tamilnadu 1997
21. T.S. Sridhar - Excavation of Archaeological sites in Tamilnadu, Dept. of Archaeology 2004
22. T.S. Sridhar - Alagankulam - An Ancient Roman Port City of Tamilnadu 2005
23. T.S. Sridhar - The Archaeology of Tamilnadu as Revealed from Excavations - Endowment Lecture, University of Madras 2005
24. T.S. Sridhar - Select Inscriptions of Tamilnadu - 2006
25. K. Sridharan - Excavations at Karur - Paper read in the Seminar on Archaeology of Tamilnadu and Kerala - Accomplishments and Prospects, Tamil University, Thanjavur 1984
26. S. Suresh - Roman Antiquities in Tamilnadu - C.P. Ramaswami - Institute of Indological Research, Chennai 1992
27. Vaidyanathan - The Ancient Geography of the Kongu Country - 1983
28. E.H. Warmington - Commerce between the Roman Empire and India - Delhi 1974
29. Wheeler R.E.M. - Arikamedu an Indo Roman Trading Station on the East Coast of India, Ancient India Vol. II, 1948
30. The Brahmi Inscriptions - South Indian Epigraphy Annual Report. 1927-28
31. Coins from Karur - A.R.E. 1953-54
32. Kerala Excavations - Indian Archaeology a Review, 1968-69, 1969-70


## எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடுகள்




# எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடுகள்




## பானை ஓட்டுக் குறியீடுகள்






பானை ஓட்டுக் குறியீடுகள்






## மணிகளின் வரைபடம்


2.
Depth - 0.58 mts
Locus - III - IV'
Colour - Black
Depth - 0.85 mts
STRATUM - 2
4
5.
Depth - 1 mt
Locus - III - IV
colour - ochor
STRATUM - 3
Colour - Green
Colour - Green
STRATUM - 5
7.
Depth - 1.80 mts
Locus - 0' - I'
colour - Green
Depth - 2.85 mts
Locus - Baulk line
Colour - Colourless, Transparent
STRATUM - 6
8.
Depth - 3.6 mts
Locus - 0' - I'
colour - Black
Depth - 3.38 mts
Locus - 0' - I'
Depth - 3.35 mts
Locus - 0' - I'
colour - Greenish.




மண்மங்கலம் சுடுமண் பொம்மைகள்




சனப்பிரட்டி மண்மேட்டில் கிடைத்த சிங்கத்தின் சுடுமண் உருவம்

KRR - 4 அகழாய்வுக்குழியின் தோற்றம்







KRR - 5 அகழாய்வுக்குழியில் தென்பட்ட
சங்ககால கட்டடத்தின் ஒரு பகுதி



கருவூர் அகழாய்வில் கிடைத்த தமிழி எழுத்துப்
பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்



ரௌலட்டட் பானை ஓடுகள் - கருவூர் அகழாய்வு



பாய் போன்ற வேலைப்பாடு மிக்க பானை ஓடுகள்
(Mat designed Pottery) கி.பி. 1, 2-ஆம் நூற்றாண்டு



கருவூரில் காணப்படும் நடுகல்
“கோ கலியன் மகன் கரூரிடை
தன் ஆநிரை கொளல்
எறிந்துபட்டான்”
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



கருவூர் அமராவதி ஆற்றங்ககரையில் கிடைத்த
சங்ககால மோதிரம்
கி.பி. 1-ஆம் நூற்றாண்டு



